# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2120/5 - 2019 අප්‍රේල් මස 22 වැනි සඳුදා - 2019.04.22

*2120/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.சீ.எவ். 1/64*

***(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2019, ஏப்பிறல் 22.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்குவிதிகள்

## பாகம் I

## பொது

சுருக்கப் பெயர்.

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பொருள்கோடல்.

*2. (1)* ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில், அதனகத்து வேறேதேனுமொரு வரைவிலக்கணம் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது அதனகத்து வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டு வரும்போது மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேட்ட அரச சட்டவுரைஞரை, அரச சட்டவுரைஞரை அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அரசுக்குரிய நியாயவாதியாயுள்ள எவரேனும் அரசுக்குரிய நியாயவாதியையும் உள்ளடக்கும்;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியோடு தொடர்புபட்டு வரும்போது அத்தகைய ஒழுங்குவிதியில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ஒழுங்குவிதியில் நோக்கங்களுக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பெயர்கொண்டு அல்லது பதவிப் பெயர் கொண்டு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"அவசரகால ஒழுங்குவிதி" என்பது, பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதிகள் அல்லது வேறு ஒழுங்குவிதிகள் என்று பொருள்படும்.

"அத்தியாவசிய சேவை" என்பது, பொதுப் பயன்பாட்டுக்குரியதாகவுள்ள அல்லது தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகவுள்ள ஏதேனும் சேவை என்று பொருளாகுமென்பதுடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது அதன் கிளையெதனையும் உள்ளடக்கும்;

"வெடிபொருள்" என்பது, வெடிபொருள் சட்டத்தில் (அத்தியாயம் 183) குறிக்கப்படும் அதே கருத்தினையேஉடையதாகவிருத்தல் வேண்டும்;

"துவக்கு" என்பது, (அத்தியாயம் 182) சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளை உடையதாய் இருத்தல் வேண்டும் ;

"பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது, எவரேனும் சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியையும் உள்ளடக்கும்;

"காணி" என்பது, நீர் செறிந்துள்ள நிலத்தையும் வீடுகளின் அல்லது கட்டடங்களின் பகுதிகளையும் உள்ளடக்கும்;

"பொலிசு அலுவலர்" என்பது, பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 53) கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பொலிசுப் படையிலுள்ள உறுப்பினரொருவர் எனப் பொருள்படும்;

"பகிரங்க அலுவலர்" என்பது, இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளையே உடையதாய் இருத்தல் வேண்டும்;

"தேவைக்கெடுத்தல்" என்பது, ஏதேனும் வாகனத்தோடு தொடர்புபட்டு வரும் போது வாகனத்தை உடைமையில் எடுத்தல் அல்லது தேவைக்கெடுக்கும் அதிகாரி அவ்வாகனத்தை வேண்டியவாறு கையாள்வதற்கு வசதிசெய்யும் படி பணித்தல் என்று பொருள்படுவதோடு அதன் இலக்கண வேறுபாடுகளும் அல்லது சுட்டுமொழிகளும் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பாதுகாப்பு அமைச்சுக்கான செயலாளர்"என்பது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் எவரேனும் மேலதிகச் செயலாளரையும் உள்ளடக்கும்;

"இலங்கை" என்பது, இலங்கையின் ஆள்புல இடப்பரப்பெனப் பொருள்படுவதோடு அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் உள்ளடக்கும்;

"குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடு" என்பது, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தவறு, (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின்கீழான ஒரு தவறு, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழான ஒரு தவறு, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழான ஒரு தவறு மற்றும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 114, 115, 116, 117, 121, 122, 128, 129 ஆம் பிரிவுகளின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறு எனப் பொருள்படும்;

"பயங்கரவாதம்" என்பது,-

(i) ஒரு மக்கள் தொகையை அச்சுறுத்துகின்ற;

(ii) ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது விடுவதற்கு இலங்கை அரசாங்கத்தை அல்லது வேறேதேனும் அரசாங்கத்தை, அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பைப் பிழையானமுறையில் அல்லது சட்டமுறையற்றவகையில் வலுக்கட்டாயப்படுத்துகின்ற;

(iii) அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தைப் பணியாற்றவிடாது தடுக்கின்ற;

(iv) இலங்கையின் அல்லது இறைமைகொண்ட வேறேதேனும் நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு அல்லது இறைமைக்குத் தீங்குவிளைவிக்கின்ற,

உட்கருத்துடன் பின்வருவனவற்றைச் செய்தல் என்று பொருளாகும்:-

(அ) எவரேனுமாளைக் கொலைசெய்தல், கொலை செய்வதற்கு எத்தனித்தல், அவருக்குப் பார தூரமான தீங்குவிளைவித்தல், அவரைப் பணயம் எடுத்தல், அல்லது ஆட்கவர்தல்;

(ஆ) செயலைப் புரிகின்ற ஆள்தவிர்ந்த வேறெவரேனுமாளின் உயிருக்கு ஆபத்து விளைவித்தல்;

(இ) அரசாங்க அல்லது தனியார் ஆதனம் உட்பட்ட ஆதனம், ஏதேனும் பொதுப் பயன்பாட்டிடம், ஓர் அரச அல்லது அரசாங்கச் செயலிடம், ஏதேனும் அரசாங்க அல்லது தனியார் போக்குவரத்து முறைமை, அல்லது ஏதேனும் உட்கட்டமைப்புச் செயலிடம் அல்லது சூழல் என்பவற்றுக்குப் பாரதூரமான சேதம் விளைவித்தல்;

(ஈ) அத்தியாவசிய சேவைகள் அல்லது வழங்கல்களுக்குப் பாரதூரமான முட்டுக்கட்டையிடுதல் அல்லது சேதம் விளைவித்தல்;

(உ) அரச அல்லது தனியார் ஆதனம் தொடர்பில்,கொள்ளை, வலிந்துபறித்தல் அல்லது திருட்டு என்ற தவறைப் புரிதல்;

(ஊ) இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட ஆள்களங்களின் ஏதேனும் இலத்திரனியல் அல்லது தன்னியக்க மாக்கப்பட்ட அல்லது கணினிமயமாக்கப்பட்ட முறைமைக்கு அல்லது வலையமைப்புக்கு அல்லது இணையச் சூழலுக்கு, அல்லது இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய ஆள்களங்களிடம் பதிவுசெய்யப்பட்ட வலையமைப்புகளுக்கு முட்டுக்கட்டையிடுதல் அல்லது சேதம் விளைவித்தல், அல்லது அவற்றுடன் தலையிடுதல்;

(எ) ஏதேனும் அத்தியாவசியச் சேவையுடன் அல்லது வழங்கலுடன் இணைந்துள்ள ஏதேனும் கூர்ந்த உட்கட்டமைப்புக்கு அல்லது தகவுப்பொருத்தச் செயலிடத்துக்கு முட்டுக்கட்டையிடுதல் அல்லது சேதம் விளைவித்தல், அல்லது அவற்றுடன் தலையிடுதல்;

(ஏ) மதஞ்சார் அல்லது கலாசாரஞ்சார் ஆதனத்துக்கு அல்லது மரபுரிமைக்கு அழிவு அல்லது சேதம் விளைவித்தல்; அத்துடன்

(ஐ) சமிக்ஞைக் கடத்துகையுட்பட, ஏதேனும் இலத்திரனியல், ஒப்புமை, எண்முறை அல்லது வேறு கம்பியுடன் இணைந்த அல்லது கம்பியில்லாக் கடத்துகை முறைமைக்கும், வேறேதேனும் அலைவரிசை அடிப்படைக் கடத்துகை முறைமைக்கும் முட்டுக்கட்டையிடுதல் அல்லது சேதம் விளைவித்தல், அல்லது அவற்றுடன் தலையிடுதல்;

(ஒ) பொதுமக்களின் அல்லது அவர்களின் ஒரு பிரிவினரின் உடனலத்துக்கும் காப்புக்கும் பாரதூரமான ஆபத்தை விளைவித்தல்;

(ஓ) அல்லது வேறேதேனும் செயல்.

(2) சட்டத்தினை அல்லது கட்டளைச்சட்டத்தினை அல்லது தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தினைப் பொருள் அமைத்துக் கொள்வதற்கு பொருள்கோடற் கட்டளைச்சட்டம் எவ்வாறு ஏற்புடையதாகவிருக்குமோ, அவ்வாறே அவசரகால ஒழுங்குவிதியொன்றை அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் கட்டளைகளை அல்லது விதிகளைப் பொருளமைத்துக் கொள்வதற்கு அக்கட்டளைச்சட்டம் ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் ஆவணத்தில் அல்லது எழுத்திலான சட்டத்தில் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியைப் பற்றி வரும் எந்தவொரு குறிப்பீடும், முரணான உட்கருத்து தென்பட்டாலொழிய, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் பின்னைய ஏதேனும் ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறான அவ்வொழுங்குவிதியைக் குறிப்பீடுசெய்வதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சேவைகள் அல்லது ஏதேனும் சேவையைப் பொதுமக்களுக்குப் பயன்பாடுடையதாக அல்லது தேசிய பாதுகாப்பிற்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாக வெளிப்படுத்தி இவ்வொழுங்குவிதிகளின் 44 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி சனாதிபதியால் ஆக்கப்படும் கட்டளைமூலம் சனாதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் சேவை, பொதுவில் இலங்கை முழுவதற்குமென அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்புக்கென அல்லது இடத்துக்கென ஆக்கப்படலாம்.

(5) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியானது, அத்தகைய ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பணிப்பில் அல்லது கட்டளையில் காலப்பகுதியொன்றைக் குறித்துரைக்கும்படி தேவைப்படுத்தியிருந்து அல்லது இயல்பதாக்கியிருந்து, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை அத்தகைய காலப்பகுதியெதனையும் குறித்துரைக்காதவிடத்து அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய பணிப்பு அல்லது கட்டளை எவ்வொழுங்குவிதியின்கீழ் விடுக்கப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அவ்வொழுங்குவிதி வலுவுடையதாயிருக்கும் காலப்பகுதி யெனக் கருதப்படுதல் வேண்டும்.

சனாதிபதியின் தத்துவங்கள்.

3. வேறு விதத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலல்லாது, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள், சனாதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட வேறு எவையேனும் உரிமைகளோடு அல்லது தத்துவங்களோடு மேலதிகமானவையாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகாது.

அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைக் கையளித்தல்.

4. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் சனாதிபதிக்கு அளிக்கப்படும் அல்லது அவர்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, சனாதிபதியால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அமைச்சரால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

தகுதிவாய்ந்த அதிகாரி.

5. (1) ஏதேனுமோர் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்கெனத் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்படும் எவரேனும் ஆட்களின் நியமனம், பொதுவில் அத்தகைய நியமனம் எந்த எழுத்தின் மூலம் செய்யப்பட்டதோ அந்த எழுத்து மூலத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கை முழுவதற்குமானதாக இருக்கலாம் அல்லது ஏதேனும் இடப்பரப்புக்கானதாக அல்லது இடத்துக்கானதாக இருக்கலாம்; அத்துடன் அத்தகைய எழுத்து மூலத்திற் குறித்துரைக்கப்படும் அத்தகைய நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டதாயும் இருக்கலாம்.

ஆயினும் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதியின் எவையேனும் நோக்கங்களுக்கென அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிற்கென அல்லது இடத்திற்கென தகுதிவாய்ந்த அதிகாரிகளாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் நியமிக்கப்படுவதை விலக்குவதாகக் கருதப்படலாகாது.

(2) பதவிப் பெயருடைய உத்தியோகமொன்றை வகிக்கும் ஒருவர், தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அதற்கு முரணாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி அத்தகைய நியமனம் அப்பதவிப் பெயருடைய உத்தியோகத்தரின் கடமைகளை அப்போதைக்கு நிறைவேற்றிவரும் ஆளுக்கு நீடிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்.*

6. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அடங்கியுள்ள எவையேனும் சிறப்பேற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக எவரேனுமொருவர்மீது விடுக்கவிருக்கும் ஓர் அறிவித்தலை அந்த ஆளுக்கு அவர் கடைசியாய் இருந்த இடத்திற்கு அல்லது வழக்கமான வாழிடத்துக்கு அல்லது அவர் வேலை செய்யுமிடத்திற்கு முகவரியிட்ட அஞ்சலில் அனுப்புவதன்மூலம் சேர்ப்பிக்கலாம்.

*கட்டளைகள் முதலானவற்றை இல்லாதொழித்தலும் வேறுபடுத்துதலும்.*

7. ஏதேனும் கட்டளையை அல்லது விதியை ஆக்குவதற்கு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியால் அளிக்கப்பட்ட எந்தவொரு தத்துவமும் அக்கட்டளையை அல்லது விதியை இல்லாதாக்குவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு அதே முறையிலும், நிபந்தனைகளெதுவுமுளதாயின், அந்த நிபந்தனைகளுக்கமையவும் பிரயோகிக்கப்படக்கூடிய தத்துவத்தையும் உள்ளடக்குவதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II
## வளவுகளை உடைமை கொள்ளுதலும் வாகனங்களையும் மற்றும் உடற் சேவைகளும் தேவைக்கெடுத்தலும்

*தவறுகள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடத்தையும் வளவையும் உடைமை கொள்ளுதல் முதலியன.*

8. (1) இந்த ஒழுங்குவிதிகளின் கீழான அல்லது 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதில் அல்லது புரிதல் தொடர்பில் ஏதேனும் கட்டடம் அல்லது வளவு பயன்படுத்தப்பட்டிருக்கின்றதெனச் சார்த்தப்படுமிடத்து அந்த இடப்பரப்பின் பொலிசுக் கண்காணிப்பாளர் அத்தகைய கட்டடத்தை அல்லது வளவுகளை உடைமையிலெடுத்தல் வேண்டுமென்பதுடன், அதில் காணப்படும் அல்லது அதில் சாதாரணமாக வதிகின்ற ஆளெவரையும் வெளியகற்றி அதிகாரமளிக்கப்படாத ஆட்களெவரும் அத்தகைய வளவுகளுக்குள் செல்லாதிருப்பதை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

ஆயின், அத்தகைய கட்டிடத்துக்கும் வளவுகளுக்கும் சொந்தம் கோரும் ஆளெவரும் அத்தகைய கட்டிடத்தையும் வளவுகளையும் விடுவிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்குவதற்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றமானது, அவரின் அறிவுக்கெட்டாமல் அல்லது அவரது அறிவுறுத்தல்களுக்கு முரணாக அத்தகைய கட்டிடமும் வளவுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவெனத் திருப்திப்படின், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டு இரண்டு வாரங்களைக் கொண்ட காலப்பகுதியொன்று முடிவடைந்ததன் மேல் அத்தகைய கட்டிடத்தையும் வளவுகளையும் விடுவிக்கும்படி கட்டளையிடலாம்.

ஆயின்,மேலும், மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான தவறொன்றைப் புரிந்தமைக்காக அத்தகைய ஆதனத்தை உடைமையிலெடுத்து ஆறு மாதங்களுக்குள் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படாவிடின் அத்தகைய ஆதனம் அதன் சட்டப்படியான சொந்தக்காரரிடம் மீளக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதியின் கீழான அல்லது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அத்தகைய வளவுகள் அல்லது கட்டிடங்கள், இவ்வொழுங்குவிதியின் கீழான அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதில் அல்லது புரிவது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவென நீதிமன்றம் திருப்தியடையுமிடத்து அந்நீதிமன்றமானது, அத்தகைய தவறுக்கு அது விதிக்கக்கூடியவாறான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய ஆதனம் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

*வாகனங்களைத் தேவைக்கெடுத்தல்.*

9. (1) தேசிய பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதியைப் பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்கு அவ்விதம் செய்தல் தேவையானது அல்லது உகந்தது எனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதின், அவர் இலங்கையிலுள்ள எந்த வாகனத்தையும் தேவைக்கெடுக்கலாம் என்பதுடன் அத்தகைய தேவைக்கெடுத்தல் தொடர்பாக அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி தேவையானது அல்லது உகந்ததென்று காணும் அத்தகைய பணிப்புகளையும் விடுக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ் தகுதிவாய்ந்த ஓர் அதிகாரி ஏதேனுமொரு வாகனத்தைத் தேவைக்கெடுக்குமிடத்து தகுதிவாய்ந்த அதிகாரி தேசிய பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதிப் பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குகந்ததென்று தகுதிவாய்ந்த அதிகாரி கருதும் அத்தகைய நோக்கத்துக்கும் அத்தகைய முறையிலும் அந்த வாகனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது கையாளலாம் அல்லது அந்த வாகனம் பயன்படுத்தப்பட அல்லது கையாளப்பட அதிகாரமளிக்கலாம்.

(3) இவ்வொழுங்கு விதியின் பந்தி (1) இனால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பயனுறப் பிரயோகிப்பதற்கு அப்படிச் செய்ய வேண்டியது அவசியம் என்று தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்பட்டால், இலங்கை முழுவதற்குமாக அல்லது அதன் குறித்த ஏதேனும் இடப்பரப்பிற்கு மட்டுமாகக் கட்டளையொன்றைப் பிறப்பிப்பதன்மூலம் அந்தக் கட்டளை நடைமுறைக்கு வருகின்ற அந்த நேரத்தில் அந்தக் கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்ற அந்த இடப்பரப்பின்கண்ணுள்ள ஏதேனும் வளவில் அந்தக் கட்டளையில் விவரிக்கப்படுகின்ற அத்தகைய வாகனத்தை தம்முடைய ஆட்சியில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் ஆள் எவரும் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய ஆளினால் அல்லது அதிகாரியினால் அந்த வாகனம் அந்த வளவிலிருந்து அப்புறப்படுத்தல் அனுமதியளிக்கப்படும் வரை அந்த வாகனத்தை அகற்றவோ அகற்றும்படி செய்யவோ அகற்ற அனுமதி கொடுக்கவோ கூடாது என்று பணிக்கலாம்.

(4) இந்த ஒழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளினால் எவரேனுமொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அத்தகைய ஒருவருக்கு உதவும்படி மற்றும் துணைசெய்யும்படி பொலிசு உத்தியோகத்தரெவரும் வேறு எவரேனுமோர் அரசாங்க உத்தியோகத்தரும் வேண்டப்படின் அவர்கள் அவ்வாறு உதவ வேண்டும் மற்றும் துணை செய்ய வேண்டும்.

(5) இந்த ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, தரைப்படை ஏவுநர், கடற்படை ஏவுநர், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர் என்று பொருள்படும்.

உடற்சேவைகளைத் தேவைக்கெடுத்தல்.

10. தேசியப் பாதுகாப்பு அல்லது அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்கு உதவி செய்யும் முகமாக அல்லது அது தொடர்பாக ஏதேனும் வேலை செய்யும்படி அல்லது உடலுழைப்பு வழங்கும்படி சனாதிபதி தமது கைப்படவுள்ள கட்டளையின் மூலம் எவரையேனும் தேவைப்படுத்தலாம் அல்லது அவ்விதமே தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தை அதற்கெனக் குறிப்பிடப்பட்ட எவரேனுமோரதிகாரிக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு வழங்கலாம்.

இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஆளெவரும் மீறுகின்றவிடத்து அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அத்தகைய தவறுக்காக நீதிமன்றம் விதிக்கக்கூடிய வேறேதேனும் தண்டத்துடன் கூடுதலாக –

(அ) அத்தகைய ஆளின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமெல்லாம், அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனாக வில்லங்கங்களின்றி குடியரசுக்கு இழப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதி வலுவுக்கு வந்த தேதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினாற் செய்யப்பட்டதான அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் பராதீனம் அல்லது வேறு கையாளுகை, வெற்றானதும் வறிதானதுமாக இருந்துள்ளதாகவும் இருக்கின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளை ஆணையாளர் தலைமையதிபதி ஒருங்கிணைத்தல்.

11. (1) சனாதிபதி, கட்டளையின் மூலம் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து எவரேனும் ஆளை இலங்கை முழுவதற்கும் அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமை அதிபதியாக நியமிக்கலாம். அத்தியாவசியமான சேவைகளைப் பேணுதல் தொடர்பிலான செயற்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதும் ஒருங்கிணைப்பதும் அவசரகால சேவைகள் ஆணையாளர் தலைமை அதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமை அதிபதியானவர் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அவரது கடமைகளைப் புரிவதற்கு அவசியமான அத்தகைய பிரதி ஆணையாளர்களையும் உதவி ஆணையாளர்களையும் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம்.

(3) அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமை அதிபதியானவர் இவ்வொழுங்கு விதிகளினால் அல்லது இவ்வொழுங்கு விதிகளின் கீழ் அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதாவது தத்துவத்தை, கடமையை அல்லது பணியை (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதி ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்குக் கையளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதிகளின்கீழான கடமைகளைப் புரிவதன் நோக்கத்துக்காக அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமை அதிபதியானவர் -

(அ) பாதுகாப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அல்லது அவ்வொழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவம் எதனையும்;

(ஆ) தகுதிவாய்ந்த அதிகாரி மேல் 9 ஆம் ஒழுங்குவிதியால் அவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட தத்துவம் எதனையும்;

(இ) ஒழுங்குவிதி, 10 இன் கீழான தத்துவம் எதுவும், அவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு அவ்வொழுங்குவிதியின் கீழ், அளிக்கப்பட்டதோ அவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு அளிக்கப்பட்ட தத்துவம் எதனையும்,

பிரயோகிக்கலாம்.

(5) அத்தியாவசியமான சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) ஐந்தாம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி எவருக்கும்;

(ஆ) எவ்வதிகாரிக்கு அல்லது அலுவலருக்கு 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் தத்துவம் அளிக்கப்பட்டதோ அவ்வதிகாரி அல்லது அலுவலர் எவருக்கும்; அத்துடன்

(இ) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி எவருக்கும்,

அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதனை உறுதி செய்வதற்கு அவசியமான அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம் என்பதுடன் விடயத்துக்கு ஏற்றவாறு அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றுடனும் இணங்கியொழுகுதல் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியின் அலுவலரின் அல்லது இணைப்பு அலுவலரின் கடமையாதலும் வேண்டும்.

## பாகம் III

## கூட்டங்கள், ஊர்வலங்கள், வெளியீடுகள், சுடுபடைக்கலங்கள், உட்பிரவேசிக்கும் உரிமை முதலியவற்றைக் கட்டுப்படுத்தல்

12. (1) அத்தியாவசியமானசேவைகளைப் பேணுவதற்காக முழுமையாக அல்லது பிரதானமாகக் குடியிருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் இடப்பரப்பிற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் அதிகாரமில்லாமல் நுழைவதைத் தடுப்பதற்கான சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமென்று தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்பட்டால், அந்தத் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளை ஒன்றின் மூலம் அக்கட்டளையிற் குறிப்பிடப்படும் அத்தகைய விலக்களிப்புகளுக்கமைய எந்தவோராளும் அந்தக் கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறு அத்தகைய அதிகாரி அல்லது ஆளின் உத்தரவின்றி அந்த இடப்பரப்புக்குள், இடத்திற்குள் அல்லது வளவுக்குள் நுழைய அல்லது இருக்கக்கூடாதென ஏற்பாடு செய்யலாம். மட்டுப்படுத்தப்பட்ட இடங்கள்.

(2) இவ்வொழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை மீறி எவரேனும் ஓர் ஆள் ஏதேனும் இடப்பரப்பிற்குள், இடத்திற்குள் அல்லது வளவிற்குள் இருப்பின், அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடிய வேறு நடவடிக்கைகளுள் எதற்கும் பங்கமின்றி அவர் அங்கிருந்து,ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு எவரேனுமாளால் அகற்றப்படலாம்.

(3) இவ்வொழுங்குவிதியில் ஏதேனும் அத்தியாவசியமான சேவை தொடர்பாக "தகுதிவாய்ந்த அதிகாரி"என்பது, அச்சேவையின் நோக்கங்களுக்காகச் சனாதிபதியினால் பெயர் கொண்டு அல்லது பதவிகொண்டு நியமிக்கப்படும் எவரேனுமோராள் என்று பொருள்படும்.

*ஊர்வலங்களையும் கூட்டங்களையும் தடை செய்தல்.*

*13. (1) சனாதிபதி, கட்டளையின்மூலம் இலங்கையிலுள்ள எவ்விடப் பரப்பிலும் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்தின்போது பொது ஊர்வலங்களை அல்லது பொதுக்கூட்டங்களை அல்லது பொது ஊர்வலங்களை அல்லது கூட்டங்களைஇக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நடாத்துதலை அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழாக்கப்படும் ஏதேனும் பிந்திய கட்டளையாற் செய்யப்படும் அத்தகைய விலக்களிப்புகளுக்கமையத் தடைசெய்யலாம்.*

*(2) இலங்கையிலுள்ள எவ்விடப்பரப்பிலும் ஏதேனும் ஊர்வலம் அல்லது கூட்டம் நிகழ்தல் பொது அமைதியைக் குழப்பக் காரணமாயிருக்கும் அல்லது பொதுமக்களுக்குள் வெறுப்பு மனப்பாண்மையை ஏற்படுத்தும் என்று சனாதிபதி அபிப்பிராயப்படின் சனாதிபதி அத்தகைய ஊர்வலங்களை அல்லது கூட்டங்களைத் தடைசெய்யும்படி பணிப்புகள் விடுக்கலாம்.*

*(3) இந்த ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்படும் அல்லது விடுக்கப்படும் ஏதேனும் கட்டளை அல்லது பணிப்புகள் இணங்கியொழுகப்படச் செய்வதற்கு நியாயமான அளவில் தேவையென்று தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலோடு அத்தகைய வலோத்காரத்தையும் எவரேனும் பொலிசு உத்தியோகத்தர் பயன்படுத்தலாம்.*

*ஊரடங்குச் சட்டம்.*

*14. (1) சனாதிபதி இலங்கையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பு தொடர்பாகக் கட்டளையின்மூலம், அக்கட்டளையால் அல்லது இந்த ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் பிந்திய கட்டளையால் செய்யப்படும் அத்தகைய விதிவிலக்குகளுக்கமைய, அவ்விடப்பரப்பில் ஆள் எவரும் அந்தக் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நேரங்களில் அல்லது அத்தகைய காலப்பகுதியின்போது ஏதேனும் பொது வீதி, புகைவண்டிப் பாதை, பொதுப் பூங்கா, பொதுப் பொழுதுபோக்குத்திடல் அல்லது வேறு பொது விளையாட்டுத் திடல் அல்லது கடற்கரை அல்லது வேறேதேனும் கட்டடம் அல்லது வளவுகள் அல்லது இடத்தில் அந்தக் கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய ஆளால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழன்றி நிற்றலாகாதெனப் பணிக்கலாம்.*

*(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் "பொது வீதி" என்பது, பொதுப் பாலமொன்றின் மேலுள்ள ஏதேனும் வீதிவழி, ஏதேனும் நடைபாதை, ஏதேனும் வடிகால், அணைக்கட்டு அல்லது பொது வீதிக்குரிய அல்லது பொது வீதியோடு தொடர்புபட்ட குழி என்பனவற்றை உள்ளடக்கும்.*

*வெளியீடுகளைக் கட்டுப்படுத்தல்.*

*15. (1) தேசிய பாதுகாப்பின் நலனுக்கு அல்லது பொது அமைதியைப்பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாக இருக்கும் அல்லது பங்கமாக இருக்கக்கூடிய விடயங்களை அல்லது படையினர் கலகம், கலகம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் என்பவற்றை அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியின் அபிப்பிராயப்படி பொது அமைதியை பேணிக்காப்பதற்கு அல்லது சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாக இருக்கக்கூடியதும் அப்போதைக்கு வலுவிலிருப்பதுமான ஏதேனும் சட்டத்தின் மீறுகையைப் புரிவதற்குத் தூண்டும் அல்லது ஊக்குவிக்கும் விடயங்களை இலங்கையில் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில் வெளியிடுவதை அல்லது இலங்கையிலிருந்து இலங்கைக்கு வெளியே உள்ள இடங்களுக்கு ஒலிபரப்புவதைத் தடுப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு அவசியமெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதுவாராயின் அத்தகைய வழிவகைகளை அவர் எடுக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளையும் விடுக்கலாம்; அத்துடன் இப்பந்தியின் கீழ் விடுக்கப்படும் எவையேனும் பணிப்புகள், செய்தி அறிக்கைகள், ஆசிரியத் தலையங்கங்கள், கட்டுரைகள், ஆசிரியர்களுக்கான கடிதங்கள், கேலிச் சித்திரப் படங்கள்,கருத்துரைகள் என்பன உட்பட ஆவணங்கள், படமுறைக் குறிப்புகள், நிழற்படங்கள், இயக்கப்படத் திரைச்சின்னங்கள்/தன்னியக்க அச்சுக்கருவி, தந்தி, தொலைக்காட்சி, பாதுகாப்புப் படையினரின் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்களை ஒளிபரப்புதல் ஆகியன வெளியிடப்பட்டு முன்னர் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படுதல் அல்லது காட்டப்படுதல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தவதற்கான ஏற்பாடு உட்பட தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அவசியமானவையென அல்லது உசிதமானவையெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய இடைநேர்விளைவான மற்றும் குறைநிரப்பு ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம்.*

*(2) (அ) இவ்வொழுங்குவிதியின் பந்தி (1) இன் கீழ் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்பின் ஏற்பாடுகளை மீறும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். செய்தித்தாளொன்றை வெளியிட்டதன் காரணமாக அத்தகைய ஏதேனும் தவறுக்காகக் குற்றவாளியாகக் காணப்படின், அவரை, சனாதிபதி, கட்டளையின்மூலம் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்திற்கு இலங்கையில் எச்செய்தித்தாள்களையும் வெளியிடலாகாதெனப் பணிக்கலாம்.*

*(ஆ) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடந்திருக்குமிடத்தும் அத்தகைய முரண்பாடு ஏதேனும் செய்தித்தாளிலுள்ள ஏதேனும் வெளியீடு*

தொடர்பிலிருக்குமிடத்தும் (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி தகுதிவாய்ந்த அதிகாரியானவர் தாம் நியாயமானது எனக் கருதும் எச்சரிக்கை ஒன்றையோ அல்லது மேற்பட்டவற்றையோ விடுத்த பின்னர் -

(i) ஆளெவரும், கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு, அத்தகைய செய்தித்தாள்களை அச்சிடுதலாகாது, வெளியிடுதலாகாது அல்லது விநியோகித்தல் ஆகாது அல்லது அச்சிடுதல், வெளியிடுதல் அல்லது விநியோகித்தல் என்பனவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்டிருத்தலாகாதென்றும்; அல்லது

(ii) அத்தகைய செய்தித்தாள் எவ்வச்சகத்தில் வெளியிடப்பட்டதோ அவ்வச்சகம் கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய எந்நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தலாகாதென்றும், அத்தகைய ஏதேனும் கட்டளை அதிற் குறித்துரைக்கப்படும் எவரேனுமாளை அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கு அவசியமானதென அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை கட்டளை எது தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தகைய ஏதேனும் அச்சகத்தை உடைமையிலெடுத்தல் அல்லது அத்தகைய அச்சகம் அல்லது அச்சக வளவுக்குள் அல்லது அதன் ஏதேனும் பாகத்துள் எவையேனும் வளவுகளை (உடைமையிலெடுத்தலுட்பட எடுக்கும் போது எவரேனுமாளுக்கு அதிகாரமளிக்கலாமென்றும்,)

கட்டளையிடலாம்.

(3) ஏதேனும் செய்தித்தாளில், தேசிய பாதுகாப்பு அக்கறைகளுக்கு அல்லது பொதுமக்கள் ஒழுங்கைப் பாதுகாத்தலுக்கு அல்லது சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பாதகமானவையாயிருக்கக் கருதப்பட்டுள்ளனவெனத் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அபிப்பிராயப்படும் விடயங்கள் படையிடர்க்கலகம், கலகம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் புரியும்படி ஆட்களைத் தூண்டி விடுவனவும் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுவனவுமான விடயங்களும் வெளியிடப்பட்டுள்ளன, வெளியிடப்பட்டிருந்தன அல்லது வெளியிடப்படும் சாத்தியமுடையன எனத் தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படுமிடத்து அவர் கட்டளை மூலம் -

(அ) ஆள் எவரும் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துக்கு அத்தகைய புதினப் பத்திரிகையினை அச்சிடவோ, வெளியிடவோ, விநியோகிக்கவோ அல்லது அச்சிடுதலில் வெளியிடுதலில் அல்லது விநியோகிப்பதில் எவ்வழியிலேனும் ஈடுபட்டிருத்தலோ ஆகாது எனவும் அத்தகைய புதினப் பத்திரிகை அச்சிடப்பட்ட அச்சகமானது அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தயை காலத்துக்கு எத்தகையதுமான நோக்கத்துக்கென அல்லது அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பயன்படுத்தப்படவோ ஆகாது எனப் பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய அக்கட்டளை இணங்கி ஒழுங்குவதனை நிலைநாட்டுவதற்கு அவசியமானதென அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை (அக்கட்டளை எவ்வச்சகம் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அவ்வச்சகத்தினையேனும் அதனை அடக்கியுள்ள எவையேனும் வளவுகளையேனும் அத்தகைய அச்சகத்தின் அல்லது வளவுகளின் ஏதேனும் பாகத்தையேனும் உடைமையின் எடுத்துக்கொள்ளல் உட்பட) எடுக்கும்படி அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஆளுக்கு அதிகாரம் அளிக்கவும் செய்யலாம் ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம், (2) ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, அத்தகைய செய்தித்தாள் தொடர்பில் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் அல்லது அத்தகைய பணிப்புகளை விடுக்கலாம் அல்லது அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(4) அக்கட்டளையில் பெயர் கொண்டு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செய்தித்தாள் தொடர்பில் இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) (ஆ) வின் அல்லது பந்தி (3) இன் ஏற்பாடுகளின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி கட்டளை ஆக்கியிருக்குமிடத்து அத்தகைய கட்டளையானது அப்பெயரின் கீழ் வெளியிடப்படும் ஏதேனும் செய்தித்தாளுக்கு மட்டுமன்றி வேறு ஏதேனும் பெயரின் கீழ் வெளியிடப்படும் செய்தித்தாளானது அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட செய்தித்தாளின் வெளியீட்டினைத் தொடர்ந்து வருவதாக அல்லது அதற்குப் பதிலாக இருக்குமாயின், அத்தகைய ஏதேனும் செய்தித்தாளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்கு விதியின் பந்தி (2) (ஆ) வின் அல்லது பந்தி (3) இன் ஏற்பாடுகளின் கீழ் அதுதொடர்பில் கட்டளையாக்கப்பட்டுள்ள ஏதேனும் செய்தித்தாளை ஆளெவரும் அச்சிடுதலோ, வெளியிடுதலோ அல்லது விநியோகித்தலோ அல்லது அச்சிடுதலில், வெளியிடுதலில் அல்லது விநியோகித்தலில் எவ்வழியிலேனும் சம்பந்தப்பட்டிருத்தலோ ஆகாது.

(6) இவ்வொழுங்கு விதியின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்பட்டதன் பின்னர் எந்த நேரத்திலும் சனாதிபதி அவர் தகுந்ததென்று கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அக்கட்டளை செயற்படுதலை இடைநிறுத்தி வைக்கும்படி பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்பை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கவும் செய்யலாம்.

(7) ஏதேனும் ஓர் அச்சகம் அல்லது எவரேனுமாளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஓர் அச்சகம் தேசிய பாதுகாப்பிற்கு அல்லது பொதுமக்களின் அமைதியைப் பேணிக்காப்பதற்கு, சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குக் குந்தகம் விளைவிக்கவெனக் கருதப்படுகின்றதாகத் தாம் அபிப்பிராயப்படுகின்ற செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தை அல்லது படைக்கலகம், கலகம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் புரியும்படி ஆட்களை ஏவும் அல்லது ஊக்குவிக்கும் செய்தியைக் கொண்டிருக்கும் ஏதேனும் பத்திரத்தைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதென்று அல்லது பயன்படுத்தப்படலாமென்று தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் அபிப்பிராயப்பட்டால், கட்டளையொன்றின் மூலம் அந்த அச்சகம் அல்லது விடயத்துக்கேற்ப அந்த ஆளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள எல்லா அச்சகங்களும் அல்லது அவற்றுள் எதுவும் அக்கட்டளை வலுவிலுள்ள காலம் வரைக்கும் எந்தவொரு நோக்கத்திற்கும் அல்லது கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படலாகாது எனக் கட்டளைமூலம் பணிக்கலாம். மேலும் அத்தகைய எந்தக் கட்டளையும் அதில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுள் எவரையும் அக்கட்டளைக்கு இணங்கும்படி செய்வதற்குத் தேவையென்று அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்குத் தோன்றும் அத்தகைய நடவடிக்கைகளை (எந்த அச்சகம் தொடர்பாக கட்டளை விடுக்கப்பட்டதோ அந்த அச்சகத்தை உடைமையிலெடுத்தல் அல்லது அந்த அச்சகம் அமைந்துள்ள எந்த வளவையும் உடைமையிலெடுத்தல் அல்லது அத்தகைய அச்சகத்தின் ஒரு பகுதியை உடைமையிலெடுத்தல் உட்பட) எடுக்க அதிகாரமளிக்கலாம்.

(8) இவ்வொழுங்குவிதியின் (2) (ஆ), (7) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்டு ஆலோசனைக் குழு ஒன்றோ, பலவோ இருத்தல் வேண்டும். (3) ஆம், (7) ஆம் பந்திகளுள் எதன் கீழும் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை முறையற்றது என்று எவரேனுமொருவர் கருதினால், அவர் அது தொடர்பான ஆட்சேபனைகளை இயைபான ஆலோசனைக் குழுவுக்குத் தெரிவிக்கலாம்.

(9) இவ்வொழுங்குவிதியின் (2) (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (3) ஆம் அல்லது (7) ஆம் பந்தியின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, அத்தகைய கட்டளையாற் பாதிக்கப்பட்ட செய்தித்தாளுடைமையாளருக்கு அல்லது அச்சகச் சொந்தக்காரருக்கு அந்தக் கட்டளை தொடர்பாக அவர் சனாதிபதிக்கு எழுத்துமூலம் அக்கட்டளை தொடர்பில் அவருடைய முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும், அவ்வாறு சனாதிபதிக்கு முறைப்பாடு செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும் சரி, அவரது ஆட்சேபனைகளை ஆலோசனைக் குழுவிற்கு தெரிவிக்கலாம் என்றும் அறிவுறுத்துவித்தல், தகுதிவாய்ந்த அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(10) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனையைப் பரிசீலனை செய்யும் பொருட்டுக் கூட்டப்படும் ஆலோசனைக் குழுக்கூட்டம் எதுவும் சனாதிபதியால் நியமிக்கப்படும் தலைவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்; அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கப்படும் ஒவ்வோர் ஆலோசனைக் குழுக் கூட்டம் எதுவும் சனாதிபதியால் நியமிக்கப்படும் தலைவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கப்படும் ஒவ்வோராளும் தமது ஆட்சேபனைக்கு ஆதாரமாக வேறு முறைப்பாடுகளை நேர்முகதாவில் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

(11) மேற்சொன்னவாறான அத்தகைய ஆட்சேபனைகள் மீது ஆலோசனைக் குழு தெரிவிக்கும் அறிக்கை சனாதிபதி முன் வைக்கப்படுதல் வேண்டும். சனாதிபதி அதைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் அவ்வாட்சேபனைகள் எந்தக் கட்டளை தொடர்பாக எழுதப்பட்டனவோ அந்தக் கட்டளையை அழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

(12) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளில் ஏதேனுமொன்றை அல்லது இவ்வொழுங்கு விதியின் பந்தி (6) இன் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்போடு இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் நிபந்தனையை மீறி ஏதேனுமொரு செய்தித்தாள் அச்சிடப்பட்டவிடத்து அல்லது வெளியிடப்பட்டவிடத்து அல்லது பரப்பப்பட்டவிடத்து, அந்தச் செய்தித்தாளில் சொந்தக்காரர், முகாமையாளர், பதிப்பாசிரியர், வெளியிடுவோர் என்கின்ற எல்லோரும் மீறுகையின் விளைவாக அந்தப் பதிப்பு அழிக்கப்பட்டாலும் சரி, அழிக்கப்படாவிட்டாலும்சரி தவறொன்றுக்காகத் தனித் தனியாகக் குற்றவாளியாதல் வேண்டும்.

(13) இந்த ஒழுங்கு விதியில் -

(அ) "இயக்கப்படத் திரைச் சித்திரம்" என்பது ஒளிச்சுவடியையும் அத்தகைய திரைச் சித்திரத்தை மற்றோர் பார்க்கும்படி செய்தல் தொடர்பாக மீள உண்டாக்கும் நோக்கத்துக்காக ஒளிப்பதிவு செய்யப்பட்ட வேறு ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும் ;

(ஆ) "வெளியிடுதல்" என்பது இயக்கப்படத் திரைச் சித்திரங்களோடு தொடர்புபட்டு வரும்போது, அத்தகைய திரைச் சித்திரத்தைப் பொது மக்களுக்குக் காட்டுதல் என்று பொருள்படுவதோடு திரைச்சித்திரத்தை மேற்குறித்தவாறு பொதுமக்களுக்குக் காட்டுதல் தொடர்பில் ஏதேனும் ஒலியைப் பொறிமுறையாக அல்லது மின்சார முறையாக மீளவும் ஒலிக்கும்படி செய்தலையும் உள்ளடக்கும் ;

(இ) "செய்தித்தாள்" என்பது ஏதேனும் இதழ், சஞ்சிகை, துண்டறிக்கை அல்லது வேறு வெளியீட்டினையும் உள்ளடக்கும் ; அத்துடன்

(ஈ) "அச்சிடும் அச்சகம்" என்பது அச்சிடுவதற்கு சிலைப்பதிவு செய்வதற்கு, ஒளிப்படம் பிடிப்பதற்கு அல்லது சொற்களைக் காணக்கூடிய முறையில் எடுத்துக்காட்டுவதற்கான அல்லது திரும்பத் தோற்றுவிப்பதற்கான வேறு செயல்முறைக்குப் பயன்படுத்த உகந்த பொறியமைப்பு, உபகரணம் அல்லது பொறித்தொகுதி என்பவற்றையும் அல்லது அத்தகைய பொறியமைப்பு உபகரணம் அல்லது பொறித்தொகுதியைச் சேர்ந்த ஏதேனும் அச்சு அல்லது வேறு பொருளையும் உள்ளடக்கும்.

*மதியுரைக் குழுக்கள்.*

16. பிரதேச செயலாளர் பிரிவொன்றின் பிரதேச செயலாளர் ஒவ்வொருவரும் அப்பிரதேச செயலாளர் பிரிவுக்குப் பகிரங்க சேவையாளர்களும் தொழிற் சங்கங்களின் பதவி தாங்குநர்களும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆட்களும் அடங்கிய குழுவொன்றை நியமித்தல் வேண்டும். அந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் பகிரங்க ஒழுங்கைப் பேணிக் காத்தல், அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுதல் என்பன பற்றி இயைபான அதிகாரிகளுக்கும் மதியுரை வழங்குதல் அத்தகைய குழு ஒவ்வொன்றினதும் கடமையாதல் வேண்டும்.

*துவக்குகளும் வெடிப் பொருட்களும்.*

17. (1) தேசிய பாதுகாப்பின் நலனையும் பொதுஅமைதியையும் உறுதிப்படுத்துவதற்காக எவரேனுமாளிடமுள்ள ஏதேனும் துவக்கும் வெடிப் பொருளும், தாம் தீர்மானிக்கும் அத்தகைய பாதுகாப்பிடத்திற் கொடுக்கப்பட்டு வைக்கப்படுதல் வேண்டுமெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி பணிக்கலாம்.

(2) இவ்வொழுங்குவிதியில் (1) ஆம் பந்தியின்கீழ் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பின் பெயர் அல்லது பதவி குறித்து அது சார்பாகக் குறிக்கப்பட்ட எந்த ஆளும் அத்தகைய பணிப்பை நிறைவேற்றலாம். அத்தகைய பணிப்பை நிறைவேற்றும் நோக்கங்களுக்கென அத்தகைய ஆள் வேறு ஆளின் அல்லது ஆட்களின் துணையோடு ஏதேனும் வளவு அல்லது வீட்டிற்குள் நுழையலாம். அத்தகைய வளவுக்குள் அல்லது இடத்திற்குள் நுழையும் நோக்கத்திற்கென ஏதேனும் வெளிக்கதவை அல்லது வெளிச் சாளரத்தை அல்லது உட்சாளரத்தை திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம். மேலும் ஏதேனும் துவக்கு அல்லது வெடிப்பொருள் இருப்பதாக அத்தகைய ஆள் சந்தேகிக்கும் அத்தகைய ஏதேனும் வைப்பிடம் அல்லது சேமிப்பிடத்தையும் திறக்கலாம் அல்லது உடைத்துத் திறக்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் விடுக்கப்பட்ட பணிப்பிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் துவக்கை அல்லது வெடிப்பொருளை எந்தவோராளும் மறைத்தலோ, அத்தகைய பணிப்பு நிறைவேற்றப்படுதலைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும் நோக்கத்தோடு வேறேதேனும் செயலைச் செய்தலோ ஆகாது.

## பாகம் IV

## மேற்பார்வை செய்தல், தேடுகையிடுதல், கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல்

*மட்டுப்படுத்தும் கட்டளை.*

18. (1) எவரேனும் குறிப்பிட்ட ஆளொருவர் தொடர்பில் அவ்வாளை -

(அ) தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியைப் பேணுவதற்கு அல்லது அத்தியாவசியமான சேவைகளைப் பேணுவதற்குப் பங்கமாக எம்முறையிலும் செயலாற்றுவதனை; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 25 ஆம் ஒழுங்குவிதியின் அல்லது 44 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் அல்லது 75 ஆம் ஒழுங்கு விதியின் (3) ஆம் பந்தியின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு முரணான எம்முறையிலும் செயலாற்றுவதனை,

தடுக்கும் நோக்கத்துடன் அவ்வாறு செய்தல் அவசியமானதெனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பின்வரும் எல்லா அல்லது எவையேனும் நோக்கங்களுக்காகச் செயலாளர் கட்டளையொன்றை ஆக்கலாம் -

(i) அக்கட்டளையினால் அல்லது அக்கட்டளையிற் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அதிகாரியினால் அல்லது ஆட்களினால் அனுமதிக்கக்கூடிய அளவுக்கன்றி, அவ்வாள் அவ்வாறு குறித்துரைக்கப்படக் கூடிய இலங்கையின் அத்தகைய இடப்பரப்பில் இருத்தலாகாதென்பதனை உறுதிப்படுத்துவதற்கும்;

(ii) அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும், அத்தகைய நேரங்களிலும் அத்தகைய அதிகாரிக்கு அல்லது ஆளுக்கு அவரது நடமாட்டங்களை அவ்வாள் அறிவிப்பதனை தேவைப்படுத்துவதற்கும்;

(iii) அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரியின் அல்லது ஆளின் அனுமதியின்றி அவ்வாள் அவரது, வதிவிடத்தினை விட்டுச் செல்வதனைத் தடைசெய்வதற்கும் அல்லது அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரியினால் அல்லது ஆளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளிலன்றி வேறெவரேனுமாள் அத்தகைய வதிவிடத்தினுள் நுழைவதனை அல்லது அதனை விட்டுச் செல்வதனைத் தடை செய்வதற்கும்;

(iv) அவ்வாள் கடவுச்சீட்டு அல்லது இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதற்காகப் பயணம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்லது பயணத்திற்கான சீட்டுக்கள் உடையவராயிருந்தால், அவரை அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அதிகாரியிடம் அல்லது ஆளிடம் அத்தகைய கடவுச்சீட்டை அல்லது விடயத்திற்கேற்ப பயணஞ் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அல்லது சீட்டுக்களை ஒப்படைக்கும்படி தேவைப்படுத்தப்படுவதற்கும்;

(v) குறித்துரைக்கப்பட்ட எவரேனும் பொருட்களை அவ்வாள் உடைமையில் வைத்திருப்பதனை அல்லது பயன்படுத்துவதனை தடை செய்வதற்கும் அல்லது மட்டுப்படுத்துவதற்கும்; அத்துடன்

(vi) அவரின் தொழில் அல்லது வியாபாரம் தொடர்பிலும், வேறு ஆட்களுடன் அவர் பழகுவது அல்லது தொடர்பிலும் செய்திகளைப் பரப்புதல் அல்லது அபிப்பிராயங்களைப் பிரசித்தம் செய்தல் தொடர்பிலான அல்லது நடவடிக்கைகள் தொடர்பிலும் அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளை அவ்வாள் மீது சுமத்துவதற்கும்,

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (1) ஆம் உபபந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று மீறுதலாக ஆளெவரும் இடப்பரப்பெதிலுமிருந்தால் அல்லது அத்தகையவொரு கட்டளைக்கிணங்க ஏதேனும் இடப்பரப்பினை விட்டுச் செல்லத் தவறினால், அப்பொழுது அவருக்கெதிராக எடுக்கப்படக்கூடியவாறான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கும் பங்கமின்றி, அவர் எவரேனும் பொலிசு அலுவலரினால் அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் அவ்விடப்பரப்பிலிருந்து அகற்றப்படலாம்.

ஆட்களைத் தடுத்துவைத்தல்.

19. (1) பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எவரேனும் ஆள் தொடர்பாக அவ்வாள் -

(அ) தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியை நிலைநாட்டுவதற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்துவதற்கு பாதகமாகச் செயல்களைச் செய்வதிலிருந்து தடுப்பதற்கும்; அல்லது

(ஆ) அவ்வொழுங்குவிதிகளின் 44 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்திகளின் ஏற்பாடுகளிலேதேனும் ஒன்றிற்கு அல்லது 25 ஆம் ஒழுங்குவிதிக்கு முரண்படும் ஏதேனுமொரு முறையில் செயலாற்றுவதிலிருந்து தடுப்பதற்கு

அவசியமென்று அபிப்பிராயப்படின் அத்தகைய ஆளைப் பாதுகாவலில் வைக்கும்படி அல்லது பாதுகாவலிலே தடுத்து வைக்கும்படி செயலாளர் கட்டளையிடலாம்.

ஆயினும், எவ்வாறாயினும் ஆளெவரும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஓராண்டை விஞ்சியவொரு காலப் பகுதிக்கு தடுத்து வைக்கப்படுதலாகாது.

(2) எவரேனும் பொலிசு உத்தியோகத்தர் அல்லது இலங்கைத் தரைப்படையுறுப்பினர் அல்லது இலங்கைக் கடற்படை உறுப்பினர் அல்லது இலங்கை வான்படை உறுப்பினர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைச் செயற்படுத்தவும் அந்நோக்கத்திற்குத் தேவையான அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தவும் உரிமையுடையவராதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றி தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவர், சட்டப்படியான காவலில் வைக்கப்பட்டவராகக் கருதப்பட வேண்டுமென்பதோடு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அதிகாரம் அளிக்கும் அத்தகைய இடத்திலும் அவரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமையவும் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறைச்சாலையொன்றில் அத்தகைய ஆள் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவிடத்து :

(அ) அக்கட்டளைச் சட்டத்தின் IX ஆம் பகுதியின் ஏற்பாடுகளல்லாத மற்றெல்லா ஏற்பாடுகளும்;

(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கைதிகளைப் போய்ப் பார்த்தல் என்பவற்றைப் பற்றிக் கூறும் விதிகள் தவிர்ந்த ஏனைய எல்லா விதிகளும்.

அத்தகைய ஆள் அக்கட்டளைச் சட்டத்தின் கருத்துப்படியான சிவில் கைதி ஒருவரானாற் போன்று அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் பொலிசுப் பரிசோதகர் தலைமயதிபதி அவ்வாறு செய்தல் உகந்ததென்று காணுமிடத்து-

(அ) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையதாகும் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிலேதேனுமொன்று அல்லது அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏதேனுமொன்று ஏற்புடையதாதல் ஆகாது என்று அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய திருத்தங்கள் அல்லது திரிபுகளுக்கமைய ஏற்புடையாதாதல் வேண்டும் என்று கட்டளையால் பணிக்கலாம் : அத்துடன்

(ஆ) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி, காலத்திற்குக்காலம் பணிக்கக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய இடத்திலும் நேரத்திலும் அத்தகைய ஆளைப் போய்ப் பார்க்கவும் அத்தகைய ஆளோடு தொடர்புகொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்கெனச் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆட்களைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றோ பலவோ இருத்தல் வேண்டும் ; இவ்வொழுங்குவிதியின் கீழ் ஒருவருக்கெதிராக விடுக்கப்பட்ட கட்டளையொன்றால் வருத்தமுறும் ஆள் எவரும் தமது ஆட்சேபனைகளை மேற்குறிப்பிட்ட குழுவிற்கு அறிவிக்கலாம்.

(5) மேற்சொன்ன அத்தகைய ஆட்சேபனைகளை ஆராய்வதற்கெனக் கூட்டப்படும் ஆலோசனை தொடர்பாகத் தமது முறையீடுகளை எழுத்துமூலத்தில் சனாதிபதிக்குத் தெரிவிப்பதற்கான நடைமுறை வாய்ப்புகள் நேரகாலத்தொடு அவருக்கு அளிக்கப்படும் எனவும் அத்தகைய முறையீடுகள் செய்யப்படினுஞ்சரி செய்யப்படாவிடினுஞ்சரி மேற்சொல்லப்பட்ட குழுவிற்குத் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தற்கு அந்த ஆளுக்கு உரிமையுண்டு எனவும் உறுதி செய்துகொள்ளுதல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபனைகளைக் கேட்டு முடிவுசெய்தல் தொடர்பான விதிகள் சனாதிபதியால் ஆக்கப்படலாம் :

(6) மேற்சொன்ன அத்தகைய ஆட்சேபனைகளை ஆராய்வற்கெனக் கூட்டப்படும் ஆலோசனைக் குழு எதற்கும் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரே தலைமையும் வகித்தல் வேண்டும். இந்த ஒழுங்குவிதியின் கீழ் எந்தெந்தக் காரணங்களுக்காக அவருக்கெதிராகக் கட்டளை விடுக்கப்பட்டது என்பதை ஆட்சேபனை விடுபவர்களுக்கறிவித்து நியாயத்தை எடுத்துரைப்பதற்குப் பொதுமானவை எனத் தலைவர் அபிப்பிராயப்படும் அத்தகைய விபரங்களைக் கொடுத்தல் தலைவரின் கடமையாதல் வேண்டும்.

*(7) ஆலோசனைக் குழு மூன்று ஆட்களை உடையதாயிருக்குமிடத்து ஏதேனுமொரு கூட்டத்தைக் கூட்டுவதற்கு வேண்டிய கூட்ட நடப்பெண் இரண்டாயிருத்தல் வேண்டும் ; மூன்றிற்கு மேற்பட்ட ஆட்களை உடையதாய் இருக்குமிடத்து கூட்ட நடப்பெண் மூன்றாயிருத்தல் வேண்டும்.*

*(8) மேற்சொன்ன அத்தகைய ஏதேனும் ஆட்சேபனை தொடர்பன ஆலோசனைக் குழுவின் அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முன் வைக்கப்படுதல் வேண்டும். அவர் அதை ஆராய்ந்த பின்னர் ஆட்சேபனைகள் எக்கட்டளை தொடர்பாக எழுப்பப்பட்டனவோ அக்கட்டளையை அழிக்கலாம்.*

*(9) பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் கீழான ஒரு கட்டளை எவ்வாள் தொடர்பாக விடுக்கப்பட்டதோ அவ்வாள் இவ்வொழுங்கு விதியின் 75 ஆம் ஒழுங்குவிதின் கீழ்த் தடைசெய்யப்பட்ட நிறுவகத்தின் உறுப்பினரென்று அல்லது உறுப்பினராயிருந்தவரென்றும். தம்மால் ஐயுறப்படுவதாக எழுத்து மூலத்தில் சான்றுரைக்குமிடத்து இவ்வொழுங்குவிதியின் (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம், (8) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் அத்தகைய ஆட்களுக்கு ஏற்புடையனவாகா.*

*(10) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழான ஒரு கட்டளை எக்காரணத்தினைக் கொண்டும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தலாகாது.*

*தேடுதல், கைப்பற்றல், கைது செய்தல், தடுத்து வைத்தல் என்பவற்றிற்கான தத்துவங்கள்.*

*20. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதாக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் ஆள் ஒருவரை, யாதேனும் பொலிசு உத்தியோகத்தர் இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான்படை என்பவற்றிலுமுள்ள யாரேனுமுறுப்பினர் அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் செயலாற்றும்படி சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர் தேடுகை செய்யலாம். அத்தகைய தேடுகை செய்வதற்காகத் தடுத்துவைக்கலாம் அல்லது பிடியாணையில்லாமலே கைது செய்யலாம் : மேலும் அக்குற்றம் புரிவதில், அல்லது அது தொடர்பாக உபயோகிக்கப்பட்ட எவ்விதமானதுமான ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள் அல்லது பதார்த்தத்தைத் தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம் அல்லது தடுத்து வைக்கலாம்.*

*(2) ஓராம் பந்தியின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட ஆளெவரும் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.*

*(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (2) இன் கீழ், தேடுகையிடுதலை நடாத்தும் யாரேனுமொருவர், அவரது தேடுகையிடுதலின் நோக்கத்தோடு தொடர்புபட்ட அல்லது சம்பந்தமுள்ள கருமம் தொடர்பாக தேடுகையிடப்படும் வளவில் அவரது இடத்தில் அல்லது மரக்கலத்தில் அல்லது வாகனத்தில் உள்ள எவரையும் அல்லது தேடுகையிடப்படும் ஆளை கேள்விகள் கேட்கலாம்.*

*(4) இவ்வொழுங்குவிதியின் பந்தி (3) இன் கீழ், விசாரிக்கப்படும் ஒவ்வோர் ஆளும் அவர் விசாரிக்கப்படும் அந்தக் கருமம் தொடர்பாக அவருக்குத் தெரிந்துள்ள அத்தகைய தகவல்களைச் கொடுத்துதவுதல் வேண்டும்.*

*(5) இவ்வொழுங்குவிதியின் கீழ் தேடுகையிடப்படவேண்டிய ஏதேனும் வளவில், இடத்தில், வாகனத்தில் அல்லது மரக்கலத்தில் வசிப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர், தேடுகையிடுதலை நடாத்துபவர் கேட்டவுடன் அவரை அவற்றுள் நுழையவிடுத்து அவர் தேடுகையிடுதற்கு வேண்டிய வசதிகளையும் செய்தல் வேண்டும்.*

*(6) இந்த ஒழுங்குவிதியின் கீழான ஒரு தேடுகையிடுதலை நடாத்தும் எவரும், தேடுகையிடப்படவேண்டிய வளவு, இடம், வாகனம் அல்லது மரக்கலத்துள் நுழைதற்காக ஏதேனும் உட்கதவை அல்லது வெளிக்கதவை அல்லது உள் யன்னலை அல்லது வெளியன்னலை உடைக்கலாம்.*

*(7) பெண்ணொருத்தியைத் தேடுகையிடுதல் அவசியமென்று கண்டவிடத்து வேறோரு பெண்ணைக் கொண்டு அப்பெண்ணை தேடுகையிடுதல் வேண்டும்.*

*(8) கைது செய்யும் அலுவலர் (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட கைது செய்தல் பற்றி, அதாவது கைது செய்யும் அலுவலர் பொலிசு அலுவலர் ஒருவரானால் கைது செய்தல் இடம் பெற்ற பிரிவின் பொலிசுக் கண்காணிப்பாளருக்கும் கைது செய்யும் அலுவலர் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவரானால் கைது செய்தல் இடம்பெற்ற பிரதேசத்துக்கான ஏவும் அலுவலருக்கும் அவ்வாறு கைது செய்த இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் அறிக்கையிடுவது அவரது கடமையாதல் வேண்டும்.*

*(9) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் ஆள் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டவிடத்து, விடயத்திற்கேற்றாற்போல வாழ்க்கைத் துணைக்கு, தந்தைக்கு, தாய்க்கு அல்லது வேறு எவரேனும் நெருங்கிய உறவினருக்கு கைது செய்யும் நிகழ்வை ஏற்றுக்கொள்வதற்கான செயலாளரினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்திலான ஆவணமொன்றை வழங்குவது கைது செய்யும் அலுவலரின் கடமையாதல் வேண்டும். அவ்வாறு கைது செய்யப்பட்ட ஆள் கட்டுக்காவலிலிருந்து விடுவிக்கப்பட்டதும் அத்தகைய ஆவணத்தை தோதான அதிகாரிக்குத் திருப்பியனுப்புவது அல்லது அவர்முன் அதனைக் காண்பிப்பது அவ்வாவணத்தை உடையவரின் கடமையாதல் வேண்டும்.*

*ஆயின், எவரேனும் ஆள் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு மேலே காட்டப்பட்டவாறாக ஆவணமொன்றை வழங்கமுடியாதவிடத்து கைதுசெய்யும் அலுவலர், பொலிசு அலுவலர் ஒருவராக இருந்தால், ஆவணமொன்றை ஏன் அவ்வாறு வழங்க முடியவில்லை என்பதற்கான காரணங்களை தகவல் புத்தகத்தில் பதிவது அவரது கடமையாதல் வேண்டும். அத்துடன் கைது செய்யும், அலுவலர் ஆயுதந்தாங்கிய படைகளில் உறுப்பினர் ஒருவராக இருந்தால் ஆவணமொன்றை ஏன் வழங்க முடியவில்லை என்பதற்கான காரணங்களை பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுவது அவரது கடமையாதல் வேண்டும்; அதன்மேல் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலர் அதற்கான காரணங்களுடன் அந்நிகழ்வு பற்றி தகவல் புத்தகத்தில் பதிவீடொன்றைச் செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.*

*(10) எவரேனும் ஆள் நியாயமான காரணமில்லாமல் (8) ஆம் பந்தியில் தேவைப்படுத்தப்பட்டவாறாக கைது செய்தமையை ஏற்றுக்கொள்ளும் ஆவணமொன்றை வழங்கத் தவறுகின்றவிடத்து அல்லது (8) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய பதிவீடொன்றைச் செய்வதற்கு வேண்டுமென்று தவிர்க்கின்றவிடத்து அல்லது ஆவணம் வழங்கப்படவில்லை என்ற நிகழ்வையும் அதற்கான காரணங்களையும் அறிவிக்கத் தவறுகின்றவிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு வருடங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒருகாலத்துக்கான மறியற் தண்டனைக்கும் குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.*

*(11) இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் ஆதனம் கைப்பற்றப்பட்டவிடத்து அல்லது தடுத்து வைக்கப்பட்டவிடத்து கைப்பற்றலை அல்லது தடுத்துவைத்தலைப் பயனுறுத்தும் ஆள், அத்தகைய ஆதனம் எந்த ஆளின் கட்டுக்காப்பிலிருந்து கைப்பற்றப்பட்டதோ தடுத்து வைக்கப்பட்டதோ அந்த ஆளுக்கு அந்த ஆதனம் தொடர்பில் பற்றுச்சீட்டொன்று வழங்குதல் வேண்டும்.*

*19 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருக் கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்.*

*21. (1) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 36 ஆம், 37 ஆம், 38 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் 19 ஆம் ஒழுங்குவிதியின் கீழ்க் கைது செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பாக ஏற்புடையனவாதல் ஆகாது.*

*ஆயினும் ஆளெவரும் இந்த ஒழுங்குவிதிகளின் 19 ஆவது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் கைது செய்யப்படும் அத்துடன் தடுத்துவைக்கப்பட்டும் இருக்குமிடத்து அத்தகைய ஆள் ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு நியாயமான ஒரு காலத்திற்குள், எந்தச் சந்தர்ப்பத்திலும் அத்தகைய கைது செய்தலின் பின்னர் முப்பது நாட்களுக்கு பிந்தாமல் எவரேனும் நீதிவான் முன்னிலைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.*

*மேலும் சட்டத்துறைத் தலைமை அதிபதியின் எழுத்துமூலமான முன் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தாலொழிய ஆள் எவரையும் நீதிவான் பிணையில் செல்ல விடுதலாகாது.*

*இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆளெவரையும் கொண்டுவருதலானது (2) ஆம் பந்தியின் கீழ் அத்தகைய ஆளைத் தடுத்து வைப்பதனை பாதித்தல் ஆகாது.*

*(2) பத்தொன்பதாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆளெவரும் அந்த ஆள் ஒழுங்குவிதியின் கீழ் கைது செய்யப்பட்ட திகதியிலிருந்து கணக்கிடப்படும் தொண்ணூறு நாட்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு அவ்வாறு தடுத்து வைக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய ஆள், அக்காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அவ்விடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரால் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்தின் முன்பு கொண்டுவரப்பட்டிருந்தாலன்றி அக்காலப்பகுதியின் முடிவில் அத்தகைய அலுவலரால் விடுவிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சிறைச்சாலையொன்றில் அத்தகைய ஆள் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவிடத்து–*

(அ) அக்கட்டளைச் சட்டத்தின் IX ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் தவிர்ந்தனவான வேறு அக்கட்டளைச் சட்டத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் ; அத்துடன்

(ஆ) கைதிகளைப் போய் பார்த்தல், அவர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளல் என்பன தொடர்பான விதிகள் தவிர்ந்தனவான அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏனைய எல்லா விதிகளும்.

அத்தகைய ஆள் அக்கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் சிவில் கைதியொருவர் என்றாற்போன்று அத்தகைய ஆளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பின்வருமாறு செய்வது உசிதமானதெனக் கருதுகின்றவிடத்து-

(அ) இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய ஆளுக்கு ஏற்புடையனவாகவுள்ள சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகள் ஏற்புடையனவாதலாகாது என்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களுக்கு அல்லது திரிபுகளுக்கு அமைவாக ஏற்புடையனவாதல் வேண்டும் என்று கட்டளை மூலம் பணிக்கலாம் ; அத்துடன்

(ஆ) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி காலத்திற்குக் காலம் பணிக்கக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் அத்தகைய ஆளைப் போய்ப் பார்க்கவும் அவருடன் கடிதத் தொடர்பு கொள்ளவும் அனுமதியளிக்கலாம்.

(3) 19ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றிக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட ஆளொருவர் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றம் ஒன்றின் முன் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படும் அலுவலரால் கொண்டுவரப்படுகின்றவிடத்து அத்தகைய நீதிமன்றம் அவர் மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மறியற்சாலையில் பிசுக்காலின் கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்பட வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியில் "பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது, எவரேனும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியை அல்லது எவரேனும் பொலிசுக் கண்காணிப்பாளரை அல்லது எவரேனும் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரை உள்ளடக்குகின்றது.

*சரணடைவோரை தடுப்புக் காவலில் வைத்திருத்தல்.*

22. (1) (183 ஆம் அத்தியாயமான) வெடிபொருட்கள் சட்டம், 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம், சுடுபடைக்கலங்கள் கட்டளைச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் அல்லது தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் VI, அத்தியாயம் VII, அல்லது அத்தியாயம் VIII என்பவற்றின் கீழான அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளுக்குப் பயந்து எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரிடம் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரிடம் அல்லது கட்டளை மூலம் சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளிடம் அல்லது ஆட்கள் குழுவிடம் சரணடையும் (இதனகத்துப்பின்னர் 'சரணடைந்தவர்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் ஆள் தாம் தன்னிச்சையாகவே சரணடைகின்றார் எனப் பயன்படும் எழுத்திலான கூற்றொன்றை அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் அல்லது ஆளிடம் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் நியதிகளில் எவரேனும் ஆள் சரணடைகின்றவிடத்து, அத்தகைய ஆள் அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் அத்தகைய சரணடைவின் இருபத்திநான்கு மணித்தியாலத்தினுள் கையளிக்கப்படுதல் வேண்டும். நீதிவான் முன்னர் அத்தகைய ஆளை உடனடியாக கொண்டுவருதலும் தோதான கட்டளை ஒன்றைப் பெறுதலும் பொறுப்பாகவுள்ள அலுவலரின் கடைமையாதல் வேண்டும்.

*குடியிருப்பாளர் தேவைப்படும் போது உள்ள உறைவர் பற்றிய நிரல்களைக் கொடுத்தல் வேண்டும்.*

23. ஏதேனும் இடப்பரப்பிலுள்ள குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் அவரது இடப்பரப்பின் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத தரத்திலுள்ள பொலிசு அலுவலர் ஒருவரினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படும் போது, அவரது அகத்தில் உள்ள உடனுறைபவர் யாவும் பற்றிய நிரலொன்றை அங்குள்ள சேவையாளர்களினின்றும், அல்லது வேறு வதிபவரினின்றும் வேறுபடுத்திக் காட்டும் வகையில் கொடுத்துதவுதல் வேண்டும். அத்துடன் மேற்சொல்லப்பட்ட பொலிசு அலுவலரின் கட்டளையில் அவ்வாறு பணிக்கப்பட்டிருந்தால் அந்நிரலிலுள்ள ஏதேனும் அதிகரிப்பு

குறைப்பு அல்லது மாற்றம் பற்றி அறிக்கையிடுதல் வேண்டும். அத்துடன் அவர் அத்தகைய கட்டளையின் கீழான அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் அறியாத ஒருவரை வைத்திருப்பது பற்றிய அறிவித்தலை அவரது இடப்பரப்பிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கொடுக்காமல் அவரை ஒழித்து வைத்திருத்தல் ஆகாது. இவ்வொழுங்குவிதியினால் அவருக்குச் சுமத்தப்பட்ட ஏதேனும் கடமையைச் செய்யத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*சிறைச்சாலைகள் மற்றும் சிறைக் கைதிகள் தொடர்பில் எவையேனும் சட்ட முறைமையான கட்டளைகளை நிறைவேற்று வதற்கு ஆயுதந் தாங்கிய படையுறுப் பினர்களின் உரிமைகள்.*

*24.* சிறைச்சாலை அல்லது சிறைக் கைதிகள் மறித்து வைத்திருக்கப்படுகின்ற அல்லது வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற ஏதேனும் வேறு இடத்தைக் காவல் புரிவதில், அல்லது எவரேனும் சிறைக் கைதிகளினால் உண்டாக்கப்படும் ஏதேனும் குழப்பத்தை அல்லது வலோத்காரத்தைத் தணிக்க உதவி செய்வதில் அல்லது தப்பியோடிச் செல்லும் எவரேனும் சிறைக்கைதியைத் திரும்பவும் கைது செய்வதில் அல்லது ஏதேனும் சட்டமுறையான கட்டளையை வலிவுறுத்துவதில் அல்லது வலுவுறுத்த உதவிசெய்வதில் அப்போதைக்கு ஈடுபட்டுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை அல்லது இலங்கை வான்படையுறுப்பினர் ஒவ்வொருவரும், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 77(5) ஆம் பிரிவின் பயனைக்கொண்டுஅக்கட்டளைச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட அதனுடன் தொடர்புபட்ட விதிகளினாலும் பொலிசு அலுவலர் ஒருவருக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் உரிமைகளையும் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### தவறுகளும் தண்டங்களும்

*அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் ஆகியவற்றுக் கெதிரான தவறு.*

*25. (1)* (அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திற்கு அழிவை அல்லது சேதத்தை விளைவிக்கும் ஏதேனும் செயலை அல்லது அத்தகைய ஆதனத்தின் பெறுமானத்தை அல்லது பயன்பாட்டை அழிக்கக்கூடிய அல்லது குறைக்கக்கூடிய அத்தகைய ஏதேனும் ஆதனத்தில் அத்தகைய ஏதேனும் மாற்றத்தை விளைவிக்கும் ஏதேனும் செயலைச் செய்யும்; அல்லது

(ஆ) நெருப்பு அல்லது ஏதேனும் எரியத்தக்க பொருள் அல்லது ஏதேனும் வெடிபொருள் அல்லது எரி பதார்த்தம் அல்லது ஏதேனும் கணை, போர்க்கருவி அல்லது ஏதேனும் வகையைச் சேர்ந்த கருவியின் உதவியோடு வேறு யாரேனும் ஆளிற்குச் சாவை அல்லது காயத்தை விளைவிக்கும் அல்லது விளைவிக்க முயலும் ; அல்லது

(இ) வெறுமையாக அல்லது பாதுகாப்பற்று விடப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஏதேனும் வளவுகளில் ஏதேனும் பொருட்களைத் திருடுகின்ற ; அல்லது

(ஈ) தண்டனைச் சட்டக்கோவையின் *427* முதல் *446* வரையான ஏதேனும் பிரிவுகளின் கீழ் ஏதேனும் தவறைப் புரியும் அல்லது ஏதேனும் வளவுகளிலிருந்து ஏதேனும் சாமான்களை அல்லது பொருட்களைச் சட்டமுறையற்று அகற்றுகின்ற அல்லது அகற்ற முயற்சிக்கின்ற; அல்லது

(உ) உப்பந்தி (அ) அல்லது உப்பந்தி (ஆ) அல்லது உப்பந்தி (இ) அல்லது உப்பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைச் செய்தல் அவ்வாட்கூட்டத்தின் குறிக்கோளாகவுள்ளதும் தண்டனைச் சட்டக்கோவையின் 138 ஆம் பிரிவின் வரைவிலக்கணத்தில் கூறப்படுவதுமான சட்ட முறையற்ற ஆட்கூட்டமொன்றின் உறுப்பினரொருவராய் உள்ள ; அல்லது

(ஊ) உப்பந்தி (இ) அல்லது உப்பந்தி (ஈ) வின்கீழ் எவையேனும் பொருட்கள் அல்லது சாமான்கள் தொடர்பில் உப்பந்தி (இ) என்பதன் கீழ் அல்லது உப்பந்தி (ஈ) என்பதன் கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளது என அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்கான காரணம் இருந்து கொண்டு அத்தகைய பொருட்களை அல்லது சாமான்களை நேர்மையற்ற முறையில் பெற்றுக்கொள்ளும் அல்லது தன்னகத்து வைத்திருக்கும்

எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது அவ்வொழுங்கு விதிகளில் எது எவ்வாறிருப்பினும் மேல் நீதிமன்றத்தின் முன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் தூக்குத் தண்டனைக்கு அல்லது இருவகையிலொருவகை ஆயுட்கால மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(2) ஆதனத்தைப் பாதுகாப்பதற்குத் தனியாளுக்கிருக்கும் உரிமை சம்பந்தமாகவும் அத்தகைய உரிமைகளைப் பிரயோகிக்கும் போது தீங்கிழைக்கும் ஆளுக்கு மரணத்தை அல்லது வேறேதேனும் துன்பத்தை எந்தச் சூழ்நிலைகளில் ஏற்படுத்தலாம் என்பதை விதந்துரைப்பதுமான) தண்டனைச் சட்டக் கோவையின் 96 ஆம் பிரிவு, பின்வருவன அப்பிரிவின் இறுதியில் சேர்க்கப்பட்டாற் போன்ற பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

“ஐந்தாவதாக- அவசரகால (நானாவித ஏற்பாடுகள், தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளின் 25 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு.”

(3) அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தவறு தொடர்பிலான குற்றப்பகர்வொன்று, குற்றம் புரியப்படும் நேரத்தில் அல்லது அந்நேரமளவில் நிலவும் குடியியல் கலகத்தை மிகைப்படுத்துவதில் அல்லது குடியியல் கலகம் தொடர்பாக அல்லது அதன் நெறியின்போது தவறு புரியப்பட்டதென சட்டத்துறை தலைமைதிபதி திருப்திப்படுவாராயின், அவரால் அனுப்பிவைக்கப்படலாம் ;

ஆயின் ஏதேனும் தவறு புரியப்படுதல் தொடர்பிலான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அவர் அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விடயங்கள் தொடர்பில் அல்லது அத்தகைய வகுதியினவான விடயங்கள் தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடருவதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அதன்மீது, அத்தகைய வழக்கு நடவடிக்கைகள், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் எழுத்திலான அதிகாரத்துடன் தொடரப்படலாம்; அத்துடன் அத்தகைய தவறுகள் தொடர்பான விளக்கம் தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XVII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) நீதிவான் நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளவிடத்து, தவறானது, இந்த ஒழுங்குவிதிகளின் 49 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

*பயங்கரவாதத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்தல் முதலியன.*

26. ஒழுங்கமைப்பொன்றுட்பட, ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆளெவரும் அல்லது ஆட்கள் தொகுதிகளெவையும், தனிப்பட்ட முறையில் அல்லது ஒரு தொகுதியாக அல்லது தொகுதிகளாக அல்லது வேறு ஆட்கள் மூலமாக-

(அ) பயங்கரவாதத்தில், அல்லது

(ஆ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டில், அல்லது

(இ) எவரேனுமாளினால், ஆட்கள் தொகுதியினால் அல்லது ஆட்கள் தொகுதிகளினால் புரியப்பட்ட ஏதேனும் பயங்கரவாதச் செயலை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதிலான வேறேதேனும் செயற்பாட்டில்,

ஈடுபடுதலாகாது என்பதுடன் இவ்வொழுங்குவிதியினை மீறிச் செயலாற்றுகின்ற அத்தகைய எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தொகுதி தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்துவருடங்களுக்கு குறையாததும் இருபது வருடங்களுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக்காலப்பகுதி ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

*இருபத்தாறாம் ஒழுங்குவிதியினை மீறி ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதைத் தடைசெய்தல்.*

27. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாளின், ஆட்கள் தொகுதியின் அல்லது ஆட்கள் தொகுதிகளின் அல்லது ஒழுங்கமைப்பொன்றின் -

(அ) சீருடையை, உடையை, சின்னத்தை, தனிக்குறியை அல்லது கொடியை அணிதலோ, வெளிக்காட்டுதலோ, ஏந்துதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது ;

(ஆ) கூட்டமொன்றை அழைத்தலோ, கூட்டுதலோ, நடாத்துதலோ அல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது;

(இ) உறுப்பாண்மையைப் பெறுதலோ அல்லது அதைச் சேருதலோ ஆகாது ;

(ஈ) ஓர் உறுப்பினருக்கு, அங்கத்தவருக்கு அல்லது வேறெவரேனும் இணையாளுக்குப் புகலிடம் அளித்தலோ, அவரை மறைத்து வைத்தலோ, அவருக்கு உதவுதலோ ஆகாது ;

(உ) மேம்பாட்டுக்கு உதவுதலோ, அவரை ஊக்குவித்தலோ, அவருக்கு ஆதரவளித்தலோ, மதியுரைத்தலோ, துணை புரிதலோ, அவரது சார்பில் செயலாற்றுதலோ ஆகாது ; அல்லது

(ஊ) ஏதேனும் செயற்பாட்டை அல்லது நிகழ்வை ஒழுங்குபடுத்துதலோ அல்லது அதில் பங்குபற்றுதலோ ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியினை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து வருடங்களுக்கு குறையாததும் பத்து வருடங்களுக்கு மேற்படாததுமான மறியற்றண்டனைக் காலப்பகுதி ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

இருபத்தியாறாம் மற்றும் 27 ஆம் ஒழுங்குவிதிகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆட்களினால் கொடுக்கல் வாங்கல் எதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

28. (1) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 26 ஆம், 27 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற, ஒன்றில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனுமாளுக்கு, ஆட்கள் தொகுதிக்கு அல்லது ஆட்கள் தொகுதிகளுக்குப் பொருள் வகையாகவோ அல்லது வேறு வகையாகவோ உதவு தொகையளித்தல், வழங்குதல், நன்கொடையளித்தல், விற்பனை செய்தல், வாங்குதல், கேள்வுக்கு விடுதல், குத்தகைக்குக் கொடுத்தல், பெறுதல், கிடைக்கக்கூடியதாக்குதல், நிதியளித்தல், விநியோகித்தல் அல்லது கடனாகக் கொடுத்தல் என்பன உட்பட எத்தகையதுமான எம்முறையிலேனும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது அல்லது அத்தகையவோர் ஆளின், ஆட்கள் தொகுதியின் அல்லது ஆட்கள் தொகுதிகளின் ஓர் உறுப்பினருடன், அங்கத்தவருடன் அல்லது இணையாளுடன் எத்தகையதுமான எம்முறையிலேனும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதலாகாது ;

ஆயின், எவ்வாறாயினும், சமாதானமான அரசியல் தீர்வைக் காண்பதனை வசதிப்படுத்தும், பயங்கரவாதத்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை முடிவுறுத்தல், சமுதாய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுதல், அபிவிருத்திசார் செயற்பாடுகளை நடாத்துதல் என்ற நோக்கங்களுக்காக, அல்லது வேறேதேனும் சட்டமுறையான நோக்கத்துக்காக, இதற்கான 26 ஆம் அல்லது 27 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஆளொருவருடன் அல்லது ஆட்கள் தொகுதியுடன் அல்லது ஆட்கள் தொகுதிகளுடன், தேசிய அல்லது சர்வதேச அரசாங்கஞ்சார் அல்லது அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்பொன்றுட்பட எவரேனுமாள், நல்லெண்ணடத்துடனும் இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்திலான அங்கீகாரத்துடனும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும் ;

ஆயின், மேலும், இவ்வொழுங்குவிதிகளின் 26 ஆம், 27 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றக் கூடிய எவரேனுமாளுக்கு அவசர மருத்துவச் சிகிச்சையை அல்லது மருத்துவ உதவியை வழங்குவதற்கென, தகுதிவாய்ந்த அதிகாரியின் அத்தகைய அங்கீகாரத்தைப் பெறுதல் அவசியமாதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியினை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து வருடங்களுக்கு நீடிக்கக்கூடியதான மறியற்றண்டனை காலப்பகுதி ஒன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தேசிய பாதுகாப்புக்கு பாதகமேற்படுத்துகின்ற அல்லது பங்கம் விளைவிக்கின்ற தகவலை வழங்குதல் ஆகாது.

29. (1) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 26 ஆம் ஒழுங்குவிதிக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாளுக்கு, ஆட்கள் தொகுதிக்கு அல்லது ஆட்கள் தொகுதிகளுக்கு அல்லது ஓர் ஒழுங்கமைப்புக்கு, தேசியப் பாதுகாப்புக்கு பாதகமேற்படுத்துகின்ற அல்லது பங்கம் விளைவிக்கின்ற ஏதேனும் தகவலை வழங்குதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியினை மீறிச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்து வருடங்களுக்கு குறையாததும் பத்து வருடங்களுக்கு விஞ்சாததுமான மறியற்றண்டனைக் காலப்பகுதி ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

சுலோகங்கள் முதலியவற்றை வெளிக்காட்டல்.

30. சொற்களின் மூலம் பேசப்பட்டிருப்பினும் சரி அல்லது எழுதப்பட்டிருப்பினும் சரி அல்லது சைகைகள் மூலம் அல்லது கட்புலனாகும் காட்சிகள் மூலம் அல்லது நடத்தை மூலம் அல்லது வேறேதேனும் செயல் மூலம், சட்டப்படி தாபிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தை, சட்டவழியல்லாது வேறு வழியில் வீழ்த்த வேண்டியதன் அல்லது வெல்ல வேண்டியதன் அவசியம், கடமை அல்லது விருப்பம் பற்றி நேரடியாக அல்லது மறைமுகமாக எடுத்துரைக்கும், தூண்டும் அல்லது ஆலோசனை கூறும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை விநியோகித்தல்.

31. பொதுமக்கள் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்கமைதிக்கு அல்லது சமுதாய வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குப் பங்கமாகவிருக்கும் உள்ளீடுகளைக் கொண்டுள்ள எவையேனும் சுவரொட்டிகள், கைத்துண்டுகளை அல்லது துண்டுப் பிரசுரங்களை ஆளெவரும், பொதுமக்களுக்குத் தெரியக்கூடிய ஏதேனுமிடத்தில் ஒட்டுதலோ அல்லது பொதுமக்களிடையே விநியோகித்தலோ ஆகாது.

வதந்திகளையும் பொய்யான கூற்றுக்களையும் தெரிவித்தல் அல்லது பரப்புதல

32. ஆளெவரும் வாய்மொழி மூலமாகவோ எத்தகையனவுமான வேறெவையேனும் வழிகள் மூலமாகவோ பொதுமக்களுக்கிடையில் பயத்தை ஏற்படுத்தும் அல்லது பொதுமக்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் சாத்தியமுடைய வதந்தி அல்லது பொய்யான கூற்று எதனையும் தெரிவித்தலோ பரப்புதலோ அல்லது பரவச் செய்தலோ ஆகாது.

குறித்த சில வகையான ஆவணங்களை அச்சிடுதல் அல்லது வெளியிடுதல்.

33. பின்வரும் கருமங்களாவன–

(அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தடைசெய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பின் செயற்பாடுகள் ;

(ஆ) பயங்கரவாத இயக்கம் பற்றி அரசாங்கத்தினால் கொண்டு நடாத்தப்பட்ட புலன் விசாரணைகள் தொடர்பான ஏதேனும் கருமம்.

(இ) பொலிசு, இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை ஆகியவற்றின் பகிர்வு, நிலைமை, நடமாட்டம் அல்லது தொழிற்பாடுகள் ;

(ஈ) இலங்கையின் பாதுகாப்புடனும் ஏமத்துடனும் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமம் ;

(உ) நேரடியாகவோ மறைமுகமாகவோ இனவாத கொந்தளிப்பை உருவாக்கக்கூடிய ஏதேனும் கருமம்.

ஆகியவற்றுள் எவையேனும் பற்றிய ஏதேனும் ஆவணத்தை அச்சிடும் அல்லது வெளியிடும் அல்லது தகவலைக் கொடுக்கும் அல்லது அதுபற்றி விமர்சிக்கும் அல்லது ஏதேனும் படக்குறிப்பு, ஒளிப்படம் அல்லது இயக்கப் படக்காட்சியை வெளியிடும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஒளிப்படமெடுத்தல் மீதான தடை.

34. பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் முன்னதாகவே பெறப்பட்ட எழுத்திலான அதிகாரவளிப்பு இல்லாமல்–

(அ) எவரேனும் பொலிசு அலுவலருக்கு அல்லது இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் எவரேனும் உறுப்பினருக்கு, உரித்தாக்கப்பட்ட அல்லது அவரால் பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்டிடத்தின், கப்பலின் அல்லது வானூர்தியின் ; அல்லது

(ஆ) ஏதேனும் அத்தகைய கட்டிடத்தின், கப்பலின் அல்லது வானூர்தியின் அருகாமையில்,

எத்தன்மைத்தான ஒளிப்படங்கள் எவற்றையும் எடுக்கின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பொய்யான கூற்று.

35. எந்தவோராளும்–

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைப் பின்பற்றி விடுக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளுக்கு விடையளிக்கும் போது முக்கிய மான ஒரு விபரத்தில் பிழையானதென்று அவரறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றைக் கூறினால் அல்லது தகவலைத் தெரிவித்தால் ; அல்லது

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதியினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் அளிக்கும்படி கேட்கப்பட்ட ஏதேனும் கணக்கு, வெளிப்படுத்தல், மதிப்பீடு, விபரத்திரட்டு அல்லது வேறேதேனும் ஆவணம் என்பவற்றில் மேற்சொன்ன மாதிரியான அத்தகைய கூற்றைக் கூறினால்,

தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*36*. சட்டப்படியான மன்னிப்பு இன்றி (இதை நிரூபித்தல் அத்தகைய ஆளைச் சாரும்) பகிரங்கக் கூட்டுத்தாபனம் உட்பட அரசாங்கத்தின் ஏதேனும் அலுவலகம், ஒழுங்கமைப்பு, நிறுவனம் அல்லது தாபனத்தின் பொலிசு உறுப்பினரின் அல்லது ஆயுதம் தாங்கிய சேவைகள் உறுப்பினரின் படையணி விரிவு பற்றிய அல்லது ஒழுங்கமைதி பற்றிய அல்லது இடம்பெயர்க்கும் சேவைகள் பற்றிய அல்லது பொலிசுக்கும் ஆயுதம் தாங்கிய சேவைகளுக்கும் உரியதான எவையேனும் படைக்கலங்கள் அல்லது படைத்தளவாடம் பற்றிய அல்லது அவை தொடர்பான ஏதேனும் படத்தை, திட்டப்படத்தை, வரைபடத்தை, கீறு படத்தை அல்லது கோட்டுப்படத்தை அல்லது வேறு விபரங்களைச் சம்பாதித்துத் தரும் அல்லது தமது கட்டுக்காவலில் அல்லது தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அல்லது தமது உடைமையில் வைத்திருக்கும் அல்லது சம்பாதித்துத்தர எத்தனிக்கும் அல்லது தமது உடைமையில் வைத்திருக்க எத்தனிக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தேசப்படம் முதலியவற்றைத் தம்வசம் வைத்திருத்தல்.

*37*. ஆளொருவர், சட்டப்படியான அதிகாரமின்றி அல்லது நியாயமான மன்னிப்பு இன்றி (இதை நிரூபித்தல் அத்தகைய ஆளைச் சார்ந்தது) தேசிய பாதுகாப்புக்கு நலனிற்கு அல்லது பொது அமைதியைப் பேணுவதற்குப் பாதகமாக இருக்கக்கூடிய அல்லது அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்ச்சியை அல்லது அவமதிப்பைக் கிளறிவிட அல்லது தூண்டிவிட அல்லது ஊக்குவிக்கக்கூடிய அல்லது அரசாங்கத்தை வீழ்த்தற்கான ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் வண்ணம் எவரேனும் ஆளை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக முடுக்கிவிடக்கூடிய ஏதேனும் எழுத்தை அல்லது குறிப்பைக் கொண்ட ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது பத்திரிகையைத் தமது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பின் அவர் தவறொன்றுக்கும் குற்றவாளியாதல் வேண்டும்.

*கிளர்ச்சியூட்டும் எழுத்துக்களை வைத்திருத்தல்.*

*38*. படைக்கலங்களை, படைத்தளபாடங்களை, வெடிபொருள்களை அல்லது வேறு அபாயகரமான பொருள்களை அல்லது பதார்த்தங்களைச் சேகரிக்கும் அல்லது அதிகாரமற்ற உடைமை கொண்டிருக்கும் அல்லது அத்தகைய படைக்கலங்கள், படைத்தளபாடங்கள், வெடிபொருட்கள், ஆயுதங்கள் அல்லது அபாயகரமான பொருட்கள் அல்லது பதார்த்தங்களை உற்பத்தி செய்வதில் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதில் எவரேனும் ஆளைத் தயார்படுத்தும் அல்லது ஆளுக்குப் பயிற்சியளிக்கும் அல்லது பயிற்சியளிக்க எத்தனிக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

படைக்கலங்கள் முதலியவற்றைச் சேர்த்தல்.

*39*. ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப் படையின் உறுப்பினராயிராமல், ஆயுதந்தாங்கிய படைகளின் அல்லது பொலிசுப் படையின் எவரேனும் உறுப்பினரால் அணியப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஆடை, உடை, சீருடை, அடையாளச்சீட்டு, நினைவுப்பொருள் அல்லது அடையாளத்தை ஏதேனும் விதத்தில் அல்லது அல்லது ஏதேனும் விபரத்தில் ஒத்திருக்கும் ஏதேனும் ஆடையை, உடையை, சீருடையை, அடையாளச்சீட்டை, நினைவுப்பொருளை அல்லது அடையாளத்தை அணியும் அல்லது அவற்றின் கட்டுக்காப்பை அல்லது கட்டுப்பாட்டை தம்முடைமையில் வைத்திருக்கும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சீருடை போன்ற உடைகளை அணிதல்.

*40*.(1) சட்டமுறையான அதிகாரமோ நியாயமான மன்னிப்போ இன்றி(அதற்கான எண்பிப்பு அத்தகைய ஆளின் மேலாதல் வேண்டும்) ஏதேனும் துவக்கை, வெடிபொருள்களை, தீங்குவிளைவிக்கும் ஆயுதத்தை அல்லது தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தை இடம்பெயர்க்கும் அல்லது இடம்பெயர்ப்பிக்கும் அல்லது இவற்றைத் தனதுடைமையில் அல்லது தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலரொருவர், கோப்போரல் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கைத் தரைப்படை உறுப்பினரொருவர், முதன்மைக் கடலோடிப் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கை கடற்படை உறுப்பினரொருவர் அல்லது வான்படைக் கோப்போரால் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் இலங்கை வான்படை உறுப்பினரொருவர் எவ்வாள் இவ்வொழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான காரணமுள்ளதோ, அவ்வாளின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் துவக்கை, வெடிபொருளை, தீங்குவிளைவிக்கும் ஆயுதத்தை அல்லது தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தை அவ்வாளிடமிருந்து அகற்றலாம்.

வெடிபொருட்கள், துவக்கு, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள், தீங்கு விளைவிக்கும் பதார்த்தம் என்பன.

(3) எவரேனும் ஆள் இந்த ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து-

(அ) அத்தகைய ஆளின் அசைவுள்ள, அல்லது அசைவற்ற ஆதனம் அனைத்தும் ; அத்துடன்

(ஆ) அத்தவறு புரியப்படுதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள வாகனமும் அல்லது கலமும்,

அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு, பாரபந்தங்களின்றி குடியரசிற்கு இழப்பிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் பந்தியின் கீழ் அரசுக்கு இழப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆதனம்-

(அ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டிராவிடின், அத்தகைய குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடொன்று எக்காலப்பகுதியினுள் செய்யப்பட வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்றதோ அக்காலப்பகுதி முடிவுறும் திகதியிலிருந்து அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்;

(ஆ) இயைபான குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டிருப்பின், மேன்முறையீட்டில் அத்தகைய குற்றத்தீர்ப்பு எத்திகதியன்று உறுதிப்படுத்தப்படுகின்றதோ அத்திகதியிலிருந்து அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

இப்பந்தியில் ''இயைபான குற்றத்தீர்ப்பு'' என்பது, எக்குற்றத்தீர்ப்பின் விளைவாக (3) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்படுகின்றதோ அக்குற்றத்தீர்ப்பு என்று பொருள்படும்.

(5) இவ்வொழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரியும் எவரேனுமாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மரண தண்டனைக்கு அல்லது சீவியகாலத்துக்கு இரு வகையில் ஒரு வகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதிகளில் -

''தீங்கு விளைவிக்கும் பதார்த்தம்'' என்பது, தீப்பற்றக்கூடிய, அரிக்கக்கூடிய அல்லது விரைவில் ஆவியாகக்கூடிய ஏதேனும் பதார்த்தம் எனப் பொருளாகும் ; அத்துடன்

''தீங்குவிளைவிக்கும் ஆயுதம்'' என்பது, வெடிகுண்டு அல்லது எறிகுண்டு ஒன்றின் அல்லது வெடிகுண்டு அல்லது எறிகுண்டு ஒன்றின் பயன்பாட்டைப் போன்ற அல்லது நோக்கத்தைப் போன்ற அதே பயன்பாட்டுக்காக அல்லது நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட அல்லது கருதப்பட்ட வேறேதேனும் உபாயம் அல்லது பொறி அமைவு என அல்லது ஆளுக்கு அல்லது ஆதனத்துக்கு ஊறுவிளைவிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஏதேனும் உபகரணம் எனப் பொருளாவதோடு, அத்தகைய வெடிகுண்டின், எறிகுண்டின், உபாயத்தின் அல்லது பொறி அமைவின் பாகமாக அமையக்கூடிய ஏதேனும் வஸ்துவையும் அல்லது பதார்த்தத்தையும் உள்ளடக்கும்.

ஏவுகணைகளை வீசுதல்.

**41.** ஆளெவரும் எஞ்சின் எரிபொருள் தாங்கி வண்டி, சாமான் பெட்டி அல்லது வாகனம் என்பனவற்றுக்கு அல்லது என்பனவற்றின் மேல் உள்ள அத்தகைய ஆளுக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஏதேனும் புகைவண்டிப் பாதையில் அல்லது பொதுத் தெருவில் நிற்கும் எவரேனும் ஆள், எஞ்சின், எரிபொருள் தாங்கிவண்டி, சாமான் பெட்டி அல்லது வாகனம் மேல் பொருளை அல்லது பதார்த்தத்தை எறிதல் கூடாது. இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளில் எதனையும் மீறும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

துவக்கை நீட்டல்.

**42.** ஆளெவரும் சட்டமுறையான காரணம் இன்றி தோட்டாவேற்றிய துவக்கையோ தோட்டாவேற்றப்படாத துவக்கையோ நீட்டுதல் கூடாது.

மிரட்டல் முதலியவற்றை தடுத்தல்.

**43.** (1) ஆளெவரும் சனாதிபதியால், கட்டளை மூலம் குறித்துரைக்கப்படும் விதித்துரைக்கப்பட்ட இலங்கையின் ஏதேனும் பிரதேசத்தில் வேறு யாரேனும் ஓர் ஆள் வதியும் அல்லது வேலை செய்யும் அல்லது தொழில் நடத்தும் அல்லது தற்செயலாகத் தங்கும் வீட்டில் அல்லது இடத்தில் அல்லது வீட்டிற்குக்கிட்ட அல்லது இடத்திற்குக்கிட்ட அந்த வீட்டில் அல்லது இடத்திலுள்ள யாரேனுமோராளை மிரட்டுவது போன்ற அல்லது அப்படியான ஒருவர் அவ்வீட்டிற்குள் நுழைவதை அல்லது வீட்டில் இருந்து வெளிக்கிழம்புவதைத் தடைசெய்வது போன்ற அல்லது அமைதியை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடிய முறையில் காத்து நிற்கக்கூடாது.

(2) இவ்வொழுங்குவிதியின் ''மிரட்டல்'' என்ற சொல்லமைப்பு ஓர் ஆளினது மனத்தில் தமக்கு அல்லது தமது குடும்பத்திலுள்ள யாரேனும் உறுப்பினர்க்கு அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் யாரேனுமொருவருக்குத் தீங்கு

விளைந்துவிடுமோ என்ற நியாயமான ஐய எச்சத்தை ஆக்குதல், யாரேனும் ஓராளுக்கு அல்லது ஆதனத்துக்கு தீங்கு விளைந்து விடுமோ என்ற நியாயமான அச்சத்தை ஆக்குதல் என்று பொருள்படும் ; "ஊறு " என்ற சொல் ஆள் ஒருவருக்கு அவரது வியாபாரம், தொழில், தொழிலீடுபாடு அல்லது வேறு வருவாய்கள் தொடர்பான ஊறுகளை உள்ளடக்குதலோடு நடவடிக்கை எடுக்கக்கூடிய ஏதேனும் பிழைகளையும் உள்ளடக்கும்.

*அத்தியாவசிய சேவைகளைப் பேணிவருதல் தடைசெய்தல்.*

*44. (1)* ஏதேனும் சேவை, அத்தியாவசிய சேவையொன்றென இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடத்து, 2019ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் அச்சேவையுடன், தொடர்புடைய ஏதேனும் சேவையில் ஈடுபட்டிருந்தவரான அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்தவரான ஆளெவரும்-

(அ) அத்தகைய கட்டளைத் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்ததன் பின்னர் அவர் சேவை செய்யும் இடத்துக்கு அல்லது தொழிலிடத்துக்கு அல்லது அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றும் ஆளொருவரினால் காலத்துக்குக்காலம் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான இந்த நடவடிக்கை வேறு இடத்துக்கு வருகை தரத் தவறுவாராயின் அல்லது மறுப்பாராயின் அல்லது அத்தகைய சேவையில் அவரது தொழில், அவரது தொழில் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க அவர் தேவைப்படுத்தப்படுகிறவாறாக வழமையான வேலை நாளில் ஏதேனும் பாகத்தின் முழுக் காலப் பகுதியின்போதும் வேலை செய்வதற்குத் தவறுவாராயின் அல்லது மறுப்பாராயின் அல்லது வேலை செய்யாது வேலையிலிருந்து வெளிநடப்புச் செய்வாராயின் அல்லது வேலைக்கு வராதிருப்பாராயின் ; அல்லது:

(ஆ) அத்தகைய கட்டளையின் திகதியிலிருந்து ஒரு நாள் கழிந்ததன் பின்னர் அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றும் ஆளொருவரினால் புரியுமாறு அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையைப் புரியத்தவறுவாராயின் அல்லது மறுப்பாராயின் ; அல்லது குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றில் ஈடுபட்டிருக்கின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கின்ற ஆளொருவராக இருந்துகொண்டு அவரது தொழில் தருநரால் அல்லது அவரது தொழில் தருநரின் அதிகாரத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவரால், புரியுமாறு அவர் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேலையைப் புரிவதற்கென அத்தகைய தொழில் தருநரால் அல்லது அத்தகைய ஆளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக (அத்தகைய நேரம் அல்லது காலப்பகுதி வழமையான வேலை நேரங்களுக்குட்பட்டதாயினுஞ்சரி, புறம்பானதாயினுஞ்சரி அல்லது விடுமுறை நாட்களாயினுஞ்சரி) புரியத் தவறுவாராயின் அல்லது மறுப்பாராயின் -

(i) வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது அவரது தொழிலைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதி நிபந்தனைகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் எல்லா நேரங்களுக்காகவும் உடனடியாக அவரது தொழிலை முடிவுறுத்தியுள்ளாரென அல்லது வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) அத்துடன் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பந்தியில் "குறித்துரைக்கப்பட்ட சேவை" என்பது, எந்த அத்தியாவசிய சேவையுடன் தொடர்புபட்ட ஏதேனும் வேலையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது ஈடுபட்டுள்ள ஆட்கள் வழமையான வேலை நேரங்களுக்குப் புறம்பான நேரங்களில் அல்லது விடுமுறை நாட்களில் வேலைசெய்யுமாறு தேவைப்படுத்தப்படக்கூடுமோ அந்த அத்தியாவசிய சேவையொன்றாகக் குறித்துரைக்கப்பட்ட சேவையாகும் என வர்த்தமானியில் வெளியிடப்படும் ஏதேனும் அத்தியாவசிய சேவை எனப் பொருள்படும்.

(2) ஏதேனுமொரு சேவை அத்தியாவசிய சேவையென வெளிப்படுத்தி சனாதிபதியினால் கட்டளை மூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து-

(அ) எந்தவொரு விதத்திலும்-

(i) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதனை இடையூறு செய்யும், தடைசெய்யும், கணக்கும் அல்லது குறைக்கும் ; அல்லது

(ii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை வேலை செய்யுமிடத்து சமுகம் தராது இடையூறு செய்யும், தடைசெய்யும், தடுக்கும் ; அல்லது

(iii) அந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதில் ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை அவர் வேலை செய்யுமிடத்து சமுகம் தராது இருக்குமாறு ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் ; அல்லது

(iv) அரசாங்கத் திணைக்களத்தினது அல்லது அதன் கிளையினது சேவையாகவுள்ள ஏதேனுக்கும் பதிலாக அல்லது நிகராக ஏதேனும் வேறு சேவையை நிறுவும்படி அல்லது

(v) அந்தச் சேவையை நடைபெறச் செய்வதற்காக ஈடுபட்டுள்ள அல்லது அது தொடர்பாக ஈடுபட்டுள்ள வேறு யாரேனுமோராளை அவர் செய்து கொண்டிருக்கும் வேலையைக் கையளிக்கும்படி அதிலிருந்து விலகும்படி வற்புறுத்தும், ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அத்தகைய ஆள் சேவையைக் கையளித்தாலும்சரி கையளிக்காதுவிட்டாலும்சரி அல்லது விலகினாலும்சரி விலகாவிட்டாலுஞ்சரி) ; அல்லது

(vi) அந்தச் சேவையை நடைபெறச் செய்வதற்காக அல்லது அது தொடர்பாக யாரேனுமொருவர் தொழிலைக் கொடுத்தலை அல்லது ஏற்றலைத் தடைசெய்யும் எந்த ஆளும் ; அல்லது

(ஆ) உடற்செயல் மூலம் அல்லது ஏதேனும் பேச்சுமூலம் அல்லது எழுத்துமூலம் வேறு யாதேனுமோராளை, இப்பந்தியின் உட்பகுதி (அ) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் செயலைச் செய்யும்படி ஏவும், தூண்டும் அல்லது ஊக்கமளிக்கும் (அதன் விளைவாக அவர் அத்தகைய செயலைச் செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி) எந்த ஆளும்.

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஒழுங்கமைப்பின் உறுப்பினர்கள் இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைப் புரிகின்றார்கள் அல்லது அதனைப் புரிவதற்கு உதவி செய்கின்றார்கள் அல்லது உடந்தையாயிருக்கின்றார்கள் என சனாதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய ஒழுங்கமைப்பானது தடை விதிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பாகும் என வெளிப்படுத்தலாம்.

(4) ஒழுங்கமைப்பொன்று, பந்தி (3) என்பதன் கீழ் தடை விதிக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பாகும் என வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து-

(அ) எழுபத்தைந்தாம் ஒழுங்குவிதியின் (2), (3), (4) அத்துடன் (5) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் அத்தகைய ஒழுங்கமைப்பிற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய கட்டளையின் திகதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராகவிருக்கின்ற ஒவ்வோராளும்-

(i) அத்தகைய ஆள், அரசாங்கத்தின் கீழ் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் பதவி வகிப்பவராக இருப்பின், எல்லா நோக்கங்களுக்காகவும், அக்கட்டளையின் திகதியிலிருந்து அத்தகைய பதவியை முடிவுறுத்தியுள்ளதாக அல்லது வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ii) அத்தோடு அந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ;

(இ) அத்தகைய ஒழுங்கமைப்பு எந்த வங்கியில் கணக்கொன்றைப் பேணுகின்றதோ அந்த ஏதேனும் வங்கி அத்தகைய கணக்கை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளொருவரையும் அனுமதித்தல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியினது ஏற்பாடுகளின் செயற்பாடு காரணமாக அவரது தொழிலை முடிவுறுத்தியுள்ளதாக அல்லது வறிதாக்கியுள்ளதாகக் கருதப்படும் ஒவ்வோராலும், அரசாங்கத்தால் அல்லது

அரசாங்கத்தின் சார்பில் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் எவையேனும் தங்குமனைகளை, அத்தகைய முடிவுறுத்தலின் அல்லது வறிதாக்கலின் மூன்று நாட்களுக்குள் காலி செய்தல் வேண்டும். அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய விடுதிகளைக் காலி செய்யத்தவறுகின்ற அத்தகைய ஆளெவரும் இவ்வொழுங்குவிதியின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பந்தியில் ''தங்குமனை'' என்பது, வதியும் நோக்கங்களுக்கென இருப்பாட்சி செய்யப்படும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்டிடம் அல்லது அறை அல்லது வேறு இருப்பிட வசதி எனப் பொருள்படும் என்பதுடன் அத்தகைய கட்டிடம், அறை அல்லது இருப்பிட வசதி அமைந்திருக்கும் ஏதேனும் காணியையும் அல்லது வளவுகளையும் உள்ளடக்கும்.

(6) யாரேனுமோராளை, இவ்வொழுங்குவிதிக்கெதிரான ஏதேனுமொரு தவறுக்காக ஏதேனுமொரு நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, அத்தகைய குற்றத்திற்காக நீதிமன்றம் சுமத்தும் வேறு ஏதேனும் தண்டத்தோடு சேர்த்து மேலதிகமாக-

(அ) அந்த ஆளுக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் யாவும் அத்தகைய குற்றத்தீர்ப்பின் காரணமாகக் குடியரசுக்கு இழக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் அத்தகைய ஆளால் அத்தகைய ஆதனம் பாராதீனப்படுத்தப்பட்டால் அல்லது வேறேதேனும் வழியில் கையுதிர்க்கப்பட்டால் அத்தகைய பாராதீனம் அல்லது கையுதிர்த்தல் வெற்றும் வறிதுமானதாகிலிருந்திருப்பதாகவும் கருதப்படல் வேண்டும்.

45. (1) (அ) எந்த ஆள்- *மரண அச்சுறுத்தல்.*

(அ) சட்டமுறையான அதிகாரமின்றி-

(i) வேறெவரேனும் ஆளுக்கு இறப்பு, உடற்றீங்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதான ; அல்லது

(ii) வேறெவரேனும் ஆளுக்கு இறப்பு, உடற்றீங்கை ஏற்படுத்துகின்றதானதோர் அச்சுறுத்தல் என நியாயமான அளவு கொள்ளப்படக்கூடியதான

ஏதேனும் கூற்றை அல்லது பட வகையிலான உருவகிப்பைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணத்தைத் தமது உடைமையில் வைத்திருக்கின்றாரோ ; அல்லது அச்சிடுகின்றாரோ அல்லது, வெளியிடுகின்றாரோ அல்லது விநியோகிக்கின்றாரோ அந்த ஆளெவரும்,

அத்தகைய வேறு ஆள், சட்டமுறையான ஏதேனும் தான்புரி தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அல்லது வேறெவரேனும் ஆளுடன் கூட்டுச் சேர்ந்தால் அல்லது வேறேதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்தால் அல்லது வேறேதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்யாது தவிர்த்தல்.

(ஆ) அத்தகைய வேறு ஆள் உறுப்பினராகவுள்ள ஏதேனும் அரசியல் கட்சியிலிருந்து அல்லது தொழிற்சங்கத்திலிருந்து விலகுமாறு அல்லது அத்தகைய அரசியல் கட்சியில் அல்லது தொழிற்சங்கத்தின் அத்தகைய வேறு ஆள் வகிக்கும் பதவியிலிருந்து விலகுமாறு அல்லது அத்தகைய வேறு ஆள் வகிக்கும் ஏதேனும் பதவியிலிருந்து விலகுமாறு அல்லது ஏதேனும் அரசியற் கட்சியுடன் இணையுமாறு, எழுத்திலான அல்லது பேச்சிலான, சொற்கள் மூலமாகவாயுனுஞ்சரி அல்லது நடத்தைமூலமாகவாயினுஞ்சரி இறப்பை அல்லது உடற்றீங்கை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துவதன் மூலம் தூண்டினால் ; அல்லது

(இ) எழுத்திலான அல்லது பேச்சிலான சொற்கள் மூலமாகவாயினுஞ்சரி அல்லது நடத்தை மூலமாகவாயினுஞ்சரி, இறப்பை அல்லது உடற்றீங்கை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துவதன் மூலம் எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது ஏதேனும் அத்தியாவசிய சேவையைப் புரிவதில் ஈடுபட்டுள்ள பகிரங்க எவரேனுமாளை, விடயத்துக்கேற்ப பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது அவ்வாறு அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ள ஆளொருவராக அவரது கடமையைப் புரிவதில், அவரது கடமையை மீறி எதனையும் செய்யுமாறு அல்லது செய்யாது விடுமாறு தூண்டினால்,

அவர் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மரணத்தினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

இவ் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய அச்சுறுத்தல் எதனையும் கொண்டுள்ள ஆவணமொன்றை ஆளொருவர் உடைமையில் கொண்டுள்ளார் என்ற எண்பிப்பானது, அத்தகைய ஆள், அந்தப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள தவறைப் புரிய எத்தணித்துள்ளார் அல்லது புரிதலுக்கு ஆயத்தஞ் செய்வதற்கான செயலைச் செய்துள்ளார் என்பதற்கான முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்கான விளக்கமானது, அத்தகைய தவறானது புரியப்பட்டது என்ற பயன்பட, பொலிசுத் தலைமையதிபதியினால் மேல் நீதிமன்றத்தில் அறிக்கை கோப்பிடப்பட்டதன் மேலும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டதன் மேலும் தொடங்கப்படுதல் வேண்டும். அத்தகைய விளக்கம் ஒவ்வொன்றும் யூரர் சபையின்றி அமருகின்ற மேல் நீதிமன்றத்தில், நீதிபதியினால் நடாத்தப் படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 450 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (எ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள், இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறுகளின் விளக்கங்களுக்கு, ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளதாகச் சார்த்தப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளினால் எவருக்காகவாயினும், எத்தன்மைத்தான சந்தர்ப்பங்களிலாயினும் ஒரு குற்ற ஒப்புதல் அல்லது குற்றஞ்சுமத்தும் கூற்று அத்தகைய தவறுக்கான ஏதேனும் விளக்கத்தில் அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய குற்ற ஒப்புதலுக்கு அல்லது குற்றஞ் சுமத்தும் கூற்றுக்கு கொடுக்க வேண்டிய பாரதூரமான தன்மையைக் குறைப்பதற்கு அல்லது தணிப்பதற்கு அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய ஆளின் சார்பில் நாடப்படுமாயின் அத்தகைய கருத்தை ஆதரிப்பதற்கு அவசியமான நிகழ்வுகளை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய ஆளின் மேலாதல் வேண்டும்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம் எதுவும் இவ்வொழுங்கு விதிகளின் கீழான தவறொன்றிற்கான விளக்கத்தின்போது ஆக்கப்பட்ட கட்டளையொன்றை புறத்தொதுக்கிவைக்கின்றதான அல்லது வேறுபடுத்துகின்றதான, அல்லது அத்தகைய விளக்கமெதனையும் நடாத்துதலை, நிறுத்துகின்றதான, இடைநிறுத்துகின்றதான அல்லது விலக்குகின்றதான ஏதேனும் கட்டளையை ஆக்குவதற்கு தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

*தவறுகள் புரிய எத்தணித்தல் முதலியன.*

46. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை -

(அ) புரிய எத்தனிக்கும் ; அல்லது

(ஆ) புரிவதற்கு இன்னோராளுக்கு உதவியளிக்கும் அல்லது உடந்தையாயிருக்கும்; அல்லது

(இ) புரிவதற்கு இன்னோராளுடன் சூழச்சி செய்யும்

எவரேனுமாள், அத்தவறுக்குத் தானும் குற்றவாளியாதல் வேண்டியதுடன் அதற்கிணங்க அவசரகால ஒழுங்குவிதியின் கீழ், அத்தகைய தவறுக்கு விதிக்கப்பட்டவாறான அதே முறையில் விளங்கப்படுதலும் அதே தண்டனையினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

*குற்றமிழைப் போருக்கு உதவுதல்.*

47. யாரேனுமொருவர் ஏதேனுமொரு அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்றிற்காகக் குற்றவாளியாகின்றாராவென்பதை அறியும் அல்லது நம்புவதற்கு நியாயமான காரணமுடையவராயிருக்கும் எந்தவோராளும் அந்த யாரேனுமோராளுக்கு, அந்தச் சொல்லப்பட்ட குற்றத்திற்காக அந்த ஆளைக் கைது செய்வதை அல்லது தண்டிப்பதைத் தடுக்கும் அல்லது இடைஞ்சல் செய்யும், குழப்பும் எண்ணத்தோடு உதவியளிக்கக்கூடாது.

*ஆட்குழுவினரால் செய்யப்படும் தவறுகள்.*

48. ஏதேனும் அவரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றமொன்று ஓர் ஆட் குழுவினராற் செய்யப்பட்டவிடத்து-

(அ) அந்தக் குழுவினர் இணைக்கப்பட்ட குழுவினராயின், அங்கீகரிக்கப்பட்ட குழுவினரின் ஒவ்வொரு பணியாளும் ; அத்துடன்

(ஆ) அந்தக் குழு ஒரு வணிகக் கூட்டுநிலையமாயின் அவ்வணிகக் கூட்டு நிலையத்தின் ஒவ்வொரு பங்காளனும்

தமக்குத் தெரியாமல் அக்குற்றம் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய குற்றம் புரியப்படுவதைத் தடுப்பதற்கு தம்மாலானவரை கவனமெடுத்தாரென்று அவர் நிரூபித்தாலன்றி அக்குற்றம் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டம்.

49. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விதியை, அல்லது அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்பை அல்லது சுமத்தப்பட்ட நிபந்தனையை மீறும் அல்லது அவற்றுக்கு இணங்கத் தவறும் எந்தவோராளும், குற்றமொன்று புரிந்தவராகி அத்தகைய அவ்வொழுங்குவிதியிற் காணப்படும் எவையேனும் சிறப்பான ஏற்பாடுகளுக்கமைய யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னரான அல்லது நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து மூன்று மாதத்திற்குக் குறையாததும் ஐந்தாண்டிற்கு மிகையாததுமான ஒரு காலத்திற்குக் கடூழியச் சிறைத் தண்டனைக்கு ஐயாயிரம் ரூபாவிற்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஒரு குற்றத்திற்கு அவ்வொழுங்குவிதியில் தண்டனையெதுவும் குறிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய குற்றத்தை புரியும் ஓர் ஆள் யூரர் சபை இல்லாத மேல் நீதிமன்றத்தின் முன்னராக, அல்லது நீதிவானொருவர் முன்னராக விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பிடப்படும் அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306(2) என்னும் பிரிவு ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான குற்றத்திற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோராளுக்கும் ஏற்புடையதாகாது.

## பாகம் VI

### நுண்ணாய்வுகள், விளக்கம் முதலியன

தகவல் கொடுப்பதற்குரிய கடமை.

50. (1) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றைப் புரிவதற்கானவோர் உட்கருத்து எத்தணிப்பு, அல்லது தயார் செய்தல் பற்றிய அல்லது அது புரியப்பட்டது பற்றி அறியவரும் எவரும் அதுபற்றிய தகவலை மிக அண்மையில் உள்ள கிராம அலுவலர் உத்தியோகத்தருக்கு அல்லது மிக அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

(2) பந்தி (1) வில் குறிப்பிடப்பட்ட தகவலை கொடுக்கத் தவறும் அல்லது மறுக்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

புலனாய்வு செய்யும் பொலிசு அலுவலர்களின் தத்துவங்கள்.

51. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறு பற்றி நுண்ணாய்வு செய்கின்ற பொலிசு அலுவலரெவரேனும்–

(அ) அத்தவறு பற்றிய நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவரெனச் சந்தேகமான எவரேனுமாளை வாய்மொழி மூலம் விசாரணை செய்யலாம். அத்துடன் அவ்வாறு விசாரணை செய்யப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை எழுத்தில் பதிதல் வேண்டும் ;

ஆயினும், எவ்வாறாயினும், அத்தகைய கூற்றொன்று அதனைச் செய்பவராலும் அதனைப் பதிவு செய்யும் பொலிசு அலுவலராலும் ஒப்பம் இடப்படுதலும் வேண்டும்.

அத்துடன் அத்தகைய கூற்றொன்றை ஒப்பமிட மறுக்கும் ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய மறுப்பானது பொலிசு அலுவலரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆளின் மாதிரிக் கையெழுத்துக்கள், நிழற்படங்கள், விரலடையாளங்கள் மற்றும் வேறு அடையாளங்காட்டும் குறிகளைப் பெற்றுக்கொள்ளலாம்;

(இ) அத்தகைய ஆளைத் தேடுகையிடலாம் அல்லது அத்தகைய ஆள் வதியும் வீட்டினுள் அல்லது வேலைத்தளத்தினுள் அவ்விடத்தைத் தேடலாம் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் தவறுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்டதாகச் சந்தேகமான ஏதேனும் இடத்தினுள், கட்டிடத்தினுள், வளாகத் தினுள் அல்லது கலத்தினுள் நுழைந்து தேடலாம் ; அத்துடன் ஏதேனும் தந்திச் செய்தி, அஞ்சல் ஆவணம் அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள வேறு புத்தகம் அல்லது ஆவணம் உட்பட, எவ்வகையினதான அசைவுள்ள ஆதனமெதனையும் சோதனையிட்டு உடைமையிலெடுக்கலாம்.

ஆயின், எப்படியிருப்பினும் ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது அஞ்சலகத்திலிருந்து ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தை பெறுவதற்கு நாடும் முன்னர் விடயத்திற்கேற்ப, அத்தகைய வங்கிக்கு அல்லது அஞ்சலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள முகாமையாளர் அல்லது அலுவலருக்கு, அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் அத்தகைய நுண்ணாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுகின்றதென உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கும் பொலிசு அலுவலரொருவரினால் எழுத்திலான முற்றகவல் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

ஐயுறப்பட்ட ஆட்களிடமிருக்கும் ஆவணங்கள்.

52. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றுடனும் தொடர்புபட்டவரென ஐயுறப்படும் எவரேனுமாளின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பத்திரம் அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் நடவடிக்கை களில் இயைபானதாதல் வேண்டியதுடன் அத்தகைய புத்தகம், ஆவணம் அல்லது பத்திரத்தின் உள்ளீடுகள் அதற்கான மேலும் எண்பிப்பின்றி அத்தகயை ஆளுக்கெதிரான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

விசாரிப்பதற்குள்ள உரிமையும் உதவி செய்வதற்கான கடமை.

53. (அ) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், அவசரகால ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றை நுண்ணாய்வு செய்யும் எவரேனும் பொலிசு அலுவலரொருவர் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் -

(i) அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது கட்டுக்காப்பில் இருப்பவர் உட்பட எவரையும், விசாரணை செய்ய அல்லது அத்தகைய விசாரணைக் காலத்தின்போது அத்தகைய விசாரணை நோக்கமாக இடத்திற்கிடம் எடுத்துச் செல்ல தத்துவம் கொண்டுள்ளார் ; அத்துடன்

(ii) இத்துடன் விசாரணை செய்யப்படும் எவரிடமிருந்தும், விசாரணைக்குத் தேவைப்படும் பிரதியொன்று உட்பட எப்பொருளையேனும் உடமையெடுக்கவும் தத்துவம் கொண்டுள்ளார்.

(ஆ) பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது தத்துவமடைந்த ஒருவருக்கு அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் விசாரணை செய்யப்படும் குற்றம் சம்பந்தமாக சகல உதவிகளையும், புரிவது ஒவ்வொருவரதும் கடமையாகும். அத்துடன் இந்த ஒழுங்குவிதியின் (அ) பந்தியின் (1) ஆவது உப பந்தியின்கீழ் விசாரிக்கப்படும் ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கப்படும் சகல கேள்விகளுக்கும், உண்மையான பதிலிருக்க வேண்டுமென்பதுடன் வேறேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், எப்பிரதியிலாவது அடங்கியுள்ள அல்லது தெரிந்து விசாரணை சம்பந்தமான விடயங்கள் எந்த வகையில் விசாரணை செய்யப்படுவருக்கு இப்பிரதியிலுள்ள அல்லது வேறு விடயம் கிடைத்திருப்பினும் அவை யாவும் வெளியிடுதல் வேண்டும்;

(இ) பொலிசு அலுவலரொருவர் அல்லது தத்துவமடைந்து ஒருவர் அவசரகால ஒழுங்குவிதியெதும் கீழ் விசாரணை செய்யும் குற்றம் விஷயமாக, தன் பொறுப்பில் அல்லது தன்னுரிமையிலுள்ள பிரதியுட்பட எப்பொருளையேனும் அந்தப் பொலிசு அலுவலரிடம் அல்லது தத்துவமடைந்தவரிடம் அவர் ஆணையிடும்போது ஒப்படைத்தல் இந்த ஒழுங்குவிதியின் (அ) பந்தியின் கீழ் விசாரணை செய்யப்படும்;

(ஈ) இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் எவற்றையேனும் மீறுவது அல்லது நிர்மாணிக்கப்பட்ட கடமையைச் செய்யத் தவறுவது அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் குற்றமென இவ்விதிகளின் 49 ஆம் விதியின்கீழ் தண்டனைக்குள்ளாகும்.

பொலிசு அலுவலருக்கு உரிமை.

54. எவரேனுமாள் தடுப்பில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருக்கும் காலத்தின்போது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றை நுண்ணாய்வு செய்யும் பொலிசு அலுவலரொருவர், அத்தகைய நுண்ணாய்வின் நோக்கங்களுக்காக நியாயமான நேரங்களில் அத்தகைய எவரேனுமாளிடம் செல்வதற்கு உரித்துடையவராயிருத்தல் வேண்டும்.

*55.* அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் பொலிசு அலுவலர் ஒருவரின் தத்துவங்கள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அவருக்குள்ள தத்துவங்களுக்கு மேலதிகமானவையேயல்லாது அவற்றைக் குறைப்பனவாகவிருத்தலாகா.

பொலிசு அலுவலகத்துவம் பொதுத் தத்துவத்துக்கு மேற்பட்டது.

*56.(1)* ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு உத்தியோகத்தர் ஒருவரின் தத்துவங்கள் முறையே இலங்கைத் தரைப்படை எவுநரால், இலங்கைக் கடற்படை ஏவுநரால் அல்லது இலங்கை வான்படை ஏவுநரால் அவ்வண்ணம் செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட இலங்கை ஆணைபெற்ற அலுவலர் அல்லது ஆணைபெறாத அலுவலரொருவராலும் பிரயோகிக்கப்படலாம்.

*(2)* ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பொலிசு உத்தியோகத்தர் ஒருவரின் தத்துவங்கள், அதற்கான சனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் பிரயோகிக்கப்படலாம்.

பொலிசு உத்தியோகத்தரொருவரின் தத்துவங்கள் வேறு ஆட்களாலும் பிரயோகிக்கப் படுதல்.

*57.* ஒரு பொலிசு அலுவலர் அல்லது ஆயுதப்படையின் எவரேனும் உறுப்பினர் அல்லது கடமை நெறியின் போது எவரேனும் ஆளின் மரணத்தை விளைவிக்கின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய அலுவலர் அல்லது உறுப்பினர் வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், முறையே பொலிசுக் கட்டுக்காப்பில் அல்லது இராணுவக் கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்படுவதற்கென தோதான அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

பொலிசு அலுவலர் அல்லது ஆயுதப் படை உறுப்பினர் தடுத்து வைத்தல்.

*58. (1)* ஏதேனுமொரு பிரேதத்தைக் கையேற்பதற்கும், புதைப்பதற்கும் அல்லது தகனஞ் செய்வதற்கும் அவசியமான எல்லா வழிவகைகளையும் கையாளுதலும் அவ்விதம் புதைத்தலின் அல்லது தகனஞ் செய்தலின் நோக்கத்துக்கான அல்லது அதன் தொடர்பான கூட்டமொன்றிற் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடிய ஆட்களைத் தமது விருப்பப்படி தீர்மானித்தலும் உதவிப்பொலிசுக் கண்காணிப்பாளரின் தரத்துக்குக் குறையாத பொலிசு உத்தியோகத்தர் எவருக்கும் சட்டமுறையானதாகும். அத்தகைய உத்தியோகத்தரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அனுமதியின்றி அத்தகைய கூட்டமெதிலாவது சமுகமாயிருக்கும் அல்லது இதனகத்தே முன்னே வழங்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலில் அத்தகைய உத்தியோகத்தருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு தடைவிளைவிக்கும் எவரும் ஒரு குற்றத்தைப் புரிந்தவராவார்.

பிரேதங்களைக் கையேற்றலும், அவற்றைப் புதைத்தல் அல்லது சுடுதலும்.

*(2)* இவ்வொழுங்குவிதியின்கீழ் பிரேதமொன்றைக் கையேற்பதற்கும் புதைப்பதற்கும் அல்லது தகனஞ் செய்வதற்கும் வழிவகைகளைக் கையாளும் உத்தியோகத்தர் அல்லது ஆள் எவராவது மரணவிசாரணை சம்பந்தமான இவ்வொழுங்குவிதிகளின் அல்லது எழுத்திலுள்ள வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்குதல் அவசியமாகாது.

*(3)* ஓராம் உட்பந்தியின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும், பொலிசு அலுவலரொருவர் அல்லது ஆயுதந்தாங்கிய சேவைகளின் உறுப்பினரொருவர், ஒன்றில் அவரினால் அல்லது அவருக்குக் கீழ்நிலையிலுள்ள எவரேனும் அலுவலரினால் புரியப்பட்ட கடமையின்போது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையின் விளைவொன்றாக ஆளொருவரின் மரணம் சம்பவித்திருக்கக்கூடுமென நம்பவதற்கு நியாயமான காரணத்தைக் கொண்டுள்ளவிடத்து அல்லது எவரேனுமாள் பொலிசுக் கட்டுக்காப்பில் அல்லது இராணுவக் கட்டுக்காப்பில் இறக்கின்றவிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் எப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளாரோ அப்பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள பிரதிக் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது, ஆயுதந்தாங்கிய படைகளின் விடயத்தில், எந்த அலகுக்கு அவர் உரியவராகவுள்ளாரோ அந்த அலகின் ஏவுகின்ற அலுவலர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXX ஆம் அத்தியாயத்திலும் 9 ஆம் பிரிவிலும் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும், இறப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது அருகிலுள்ள பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*59.* ஐம்பத்தெட்டாம் ஒழுங்குவிதி (3) ஆம் பந்தியின் கீழான தகவல் கிடைக்கப்பெற்றதன் மேல் விடயத்திற்கேற்றவாறு, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி அல்லது பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி–

பொலிசு அலுவலர் அறிக்கை செய்தலுக்கான கூற்றுக்களைப் பதிதலும் முதலிய.

*(அ)* உதவிப் பொலிசு கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவியிலுள்ள அலுவலர் ஒருவரைச் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று –

(i) அவரது அவதானிப்புக்களைப் பதியும்படி;

(ii) காண்பொருளாக இருக்கக்கூடிய எதனையும் பொறுப்பில் எடுக்கும்படியும் ; அத்துடன்

(iii) அவரது அப்பிப்பிராயத்தின்படி எவ்வாள் அத்தகைய இறப்புத் தொடர்பான சூழ்நிலைகளை அறிந்திருக்கிறாரெனத் தோன்றுகின்றதோ அவ்வாள் எவரினதும் கூற்றுக்களைப் பதிவதற்கும் பணித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் விடயத்தில், உடல் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அத்தகைய நிகழ்வினை நீதிவானுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்;

இறந்த உடல்களைப் பரிசோதனை செய்தலும் அடக்கம் அல்லது தகனம் செய்தலும்.

60. (1) நீதிவான் ஆனவர் 59 என்னும் பிரிவின் கீழ் விடயத்துக்கேற்றவாறு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியிடமிருந்து அல்லது பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியிடமிருந்து நிகழ்வுகள் பற்றிய அறிக்கை கிடைக்கப்பட்டதன் மேல் –

(அ) அத்தகைய உடலில் பிரேத பரிசோதனையொன்றை உடனடியாக நடத்தும்படி அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரைப் பணித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உடல் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டிருப்பின் அதனை மீண்டும் வெளி எடுப்பதற்கும் பணிக்கலாம்; அத்துடன்

(ஆ) பிரேத பரிசோதனை முடிவுற்றதும் உடலைக் கையாளுகைக்கெனப் பிரதிப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கும்படி கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) மேலே பந்தி (1) (ஆ) என்பதும் கீழ் எந்தப் பிரதிப் பரிசோதகர் தலைமையதிபதியிடம் உடல் ஒப்படைக்கப்படுகின்றதோ அந்தப் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தேசிய பாதுகாப்பின் நலன் கருதி அல்லது பொது ஒழுங்கைப் பேணுவதற்கு அல்லது நிலைநாட்டுவதற்கு அவசியமான அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய இறந்த உடலை ஒப்படைத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியானவர் தேசிய பாதுகாப்பின் நலன்கருதி அல்லது பொது ஒழுங்கைப் பேணுவதற்கென அல்லது நிலைநாட்டுவதற்கென அச்சூழ்நிலைகளில் அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளுக்கு இணங்க இறந்த உடலை உடைமையிலெடுத்து அடக்கம் செய்தலுக்கோ அல்லது தகனம் செய்தலுக்கோ அதிகாரமளிக்கலாம்.

பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி நீதிமன்றத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தில் எவரேனும் ஆள் இறப்புப் பற்றி விசாரணை செய்வதற்கு மேல் நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.

61. (1) கொழும்பில் நடைபெறும் மேல் நீதிமன்றம் ஆனது, எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளது. எது எப்படியிருப்பினும், தீவின் எப்பாகத்திலும் அல்லது தீவின் ஆள்புல நீர்ப்பரப்புக்குள், 58 என்னும் ஒழுங்குவிதியில் (3) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் ஏற்படுத்தப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்டதெனக் கொள்ளப்படும் எவரேனும் ஆளின் இறப்புப் பற்றி விசாரணை செய்வதற்குப் புறநீங்கலான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கொழும்பில் நடைபெறும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆனவர் அத்தகைய நீதிமன்றத்துக்குப் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், அத்தகைய விண்ணப்பத்தில் இறந்தவர் எனப்பெயர் குறிப்பிடப்படும் ஆளின் இறப்புக்கான காரணம் பற்றி விசாரணையொன்று நடாத்துதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் பந்தி (4) வின் கீழான விண்ணப்பமொன்றில் இறந்தவர் எனப்பெயர் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆளின் இறப்புத் தொடர்பில் ஏதேனும் நீதிவான் நீதிமன்றத்தில் எவையேனும் நடவடிக்கைகள் முடிவுறாதிருக்குமிடத்து, அத்தகைய விண்ணப்பத் திகதியன்று நீதிவான் நீதிமன்றத்தில் அவ்வாறு முடிவுறாதுள்ள அத்தகைய நடவடிக்கைகள் யாவும், சொல்லப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டவையாதல் வேண்டும்.

(4) மேல் நீதிமன்ற நீதிபதி ஆனவர், தேசிய பாதுகாப்பின் நலனையும் பொது ஒழுங்கை நிலைநாட்டுதலையும் கவனத்திற்கொண்டு, அத்தகைய விசாரணையை அல்லது அத்தகைய விசாரணையின் பாகத்தை இலங்கையின் எப்பாகத்திலும் நடாத்தலாம்.

(5) பிரேத பரிசோதனையை நடாத்துகின்ற அரசாங்க மருத்துவ அலுவலர், அவரது அறிக்கையில் சொல்லப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அதில் அடங்கியுள்ளவற்றை எவரேனுமாளுக்கு

வெளியிடுவதற்கு மேல் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி, அவ்வாறு வெளியிடுதலுமாகாது.

(6) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஆனவர், முதனிலை அவதானிப்புகளில் அறிக்கையையும் அத்துடன் விசாரணையை நடாத்துகின்ற நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு ஆவணங்களையும் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(7) மேல் நீதிமன்ற நீதிபதி ஆனவர், பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது அதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரால் தமது முன்னிலையில் இடப்படக்கூடியவாறான அத்தகைய சான்றிதழையும், அத்துடன் விசாரணையின் கீழுள்ள இறப்புத் தொடர்பான சூழ்நிலைகளை அறிந்துகொள்வரெனத் தோன்றுகின்ற வேறு எவரேனும் ஆளின் சான்றினையும் பதிதல் வேண்டும்.

(8) மேல் நீதிமன்றத்தின் முன்னரான நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் சமுகமளிப்பதற்கியலாதிருத்தல் வேண்டும் என்பதுடன் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான நடவடிக்கைகளின் அத்தகைய அறிக்கைகள் அல்லது அதன் பாகம் மட்டுமே வெளியிடப்படுதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அதற்கென அந்நீதிமன்றத்துக்குச் செய்யப் படும் விண்ணப்பமொன்றின் மீது, நடவடிக்கைகளுக்கு அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்துக்குப் பொது மக்கள் சமுகமளிக்கலாமெனப் பணிக்கலாம்.

(9) மேல் நீதிமன்ற நீதிபதி ஆனவர், விசாரணை முடிவடைந்ததும், சான்றுப் பதிவேட்டையும் அத்துடன் இறப்பு ஏற்படுத்தப்பட்ட, சூழ்நிலைகள் பற்றிய அறிக்கையையும், அவற்றுடன் வேறு ஆவணங்களையும் சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*சட்டத்துறைத் தலைமை யதிபதியின் தத்துவங்கள்.*

62. ஒழுங்குவிதி 61 இன் பிரிவு (9) என்பதன் கீழ் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட சான்றுப்பதிவேடும் வேறு ஆவணங்களும் கிடைக்கப்பெற்றதன்மேல், சட்டத்துறைத் தலைமையதிபதி பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் -

(அ) அவருக்குத் தேவைப்படக்கூடியவாறான வேறு மேலதிக விடயங்களை அல்லது தகவலைக் கோருதல்;

(ஆ) ஏதேனும் தவறு புரியப்பட்டமை வெளிக்காட்டப்பட்டுள்ளதென அவர் திருப்திப்படின்-

(i) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத் தின் XIV ஆம் அல்லது XV ஆம் அத்தியாயங்களின் கீழ் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பணித்தல் ; அல்லது

(ii) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 393 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டின் கீழ் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தல்.

## பாகம் VII

### பொதுவானவை

*நீதிமன்ற நடவடிக்கை களுக்கு முதலிடம் கொடுத்தல்.*

63. ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் ஒருவரால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றம் தொடர் பான நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்திலும் மற்ற அலுவல்களைக் கவனிக்க முன்னர் எடுத்துக்கொள்ளப் படுதல் வேண்டும்.

*விசாரணைகளும் விளக்கங்களும்.*

64. (1) இதனகத்து வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிரவும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஆளொருவரினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறொன்று தொடர்பிலான நடவடிக்கைகள் அப்போதைக்கு அவ்வாள் உள்ள இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள இலங்கையிலுள்ள தோதான நீதிமன்றத்தின் முன்னர் எடுக்கப்படலாம்.

(2) எந்த நீதிமன்றத்தில் –

(அ) அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் தவறுகள்; அத்தவறுகளை ஆக்கும் செயல்கள் அல்லது செய்யாமைகள் ;

(ஆ) அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை நேரடியாக வாயினுஞ்சரி மறைமுகமாகவாயினுஞ்சரி பிரயோகிப்பதன் அல்லது புரிவதன் அல்லது அவ்விதம் கருதப்படும் பிரயோகத்தின் அல்லது புரியப்படுதலின் விளைவானமையால் அல்லது அவற்றிலிருந்து எழுந்தனவாய் அல்லது அவற்றின் போது செய்யப்பட்டனவாய் அல்லது செய்யாது தவிர்க்கப்பட்டனவாய் உள்ளவிடத்து–

அவை விசாரிக்கப்படுதல் அல்லது விளங்கப்படுதல் வேண்டும் என்பதனைச் சட்டத்துறைத் தலைமை அதிபதி தீர்மானிக்கலாம். அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தவறுகள் அந்நீதிமன்றத்தின் இடப்பரப்பு நியாயாதிக்க எல்லைக்குள் புரியப்பட்டிருப்பின் அத்தவறுகள் விசாரிக்க அல்லது விளங்க நியாயாதிக்கம் கொண்டிருக்க வேண்டிய நீதிமன்றமொன்றாதல் வேண்டும்.

(3) குற்றச்சாட்டுக்களில் ஆக குறைந்தது ஒன்றாவது மேலே (2) ஆம் பந்தியில் (ஆ) எனும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றுக்கானதாக இருக்குமிடத்து, சட்டத்துறைத் தலைமை அதிபதி வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், மேல் நீதிமன்றத்துக்கு நேரடியாகக் குற்றப்பகர்வொன்றை அனுப்பி வைக்கலாம் என்பதுடன், குற்றம் சாட்டப்பட்டவர் அவ்வாறு முன்வைக்கப்பட்ட குற்றப்பகர்வின் மீது யூரி இல்லாமலே விளங்கப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் தவறு எந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்பட வேண்டுமென இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவர் தமது எழுத்திலான சிறப்பாணை மூலம் அத்தகைய நீதிமன்றத்தை அத்தவறு விசாரிக்கப்படவேண்டிய அல்லது விளங்கப்படவேண்டிய நீதிமன்றமெனச் சுட்டிக்குறித்தல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய விசாரணை அல்லது விளக்க நடவடிக்கைகளுடன் பதிவேட்டில் கோப்பிடப்படவேண்டிய அத்தகைய சிறப்பாணை அதிகாரத்தின் மேல் அந்நீதிமன்றத்தினால் விசாரணை அல்லது விளக்கம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் தீர்மானமொன்று–

(அ) ஒன்றில் இடப்பரப்பில் அவசரகால ஒழுங்குவிதியின்கீழ் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டதாகச் சாட்டப்படும் எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

ஆ) இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டதாகச் சாட்டப்படும் அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும்; அல்லது

(இ) ஒன்றில் இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஆட்களினால் அவ்வாறு புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சார்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(ஈ) ஒன்றில் இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த ஆட்களினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிப்பிட்ட வகுப்பு அல்லது விவரணத்தைச் சேர்ந்த அத்தகைய எல்லாத் தவறுகளுக்கும் ; அல்லது

(உ) ஒன்றில் இலங்கையடங்கிலும் அல்லது இலங்கையிலுள்ள குறிப்பிட்ட ஏதேனும் இடப்பரப்பில் எவரேனும் குறிப்பிட்ட ஆளினால் புரியப்பட்டதாகச் சாட்டப்படும் ஏதேனும் குறிப்பிட்ட தவறுக்கு ஏற்புடையதாக்கப்படலாம்.

சட்டத்துறை தலைமைய திபதியின் வலுவளிப்பு.

65. (1) இருபத்தைந்தாம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய–

(அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிரான தவறொன்றுக்காக ; அல்லது

(ஆ) அத்தகைய தவறாக அமையும் செயல் அல்லது செய்யாமை நேரடியாகவாயினுஞ்சரி அல்லது மறைமுகமாகவாயினுஞ்சரி, அத்தகைய ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் தத்துவம் அல்லது கடமை பிரயோகிக்கப்படுவதன் அல்லது புரியப்படுவதன் அல்லது பிரயோகிக்கப்படுவதாக அல்லது புரியப்படுவதாக உத்தேசிக்கப்படுவதன் விளைவாக அல்லது அதினின்றெழுந்ததாக அல்லது பிரயோகிக்கப்படுகையில் அல்லது புரியப்படுகையில் அல்லது பிரயோகிக்கப்படுவதாக அல்லது புரியப்படுவதாக உத்தேசிக்கப்படுகையில் புரியப்பட்டதாக அல்லது செய்யாது விடப்பட்டதாக இருக்குமிடத்து எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கெதிரான தவறொன்றுக்காக

சட்டத்துறை தலைமையதிபதியின் எழுத்திலான சம்மதத்தால் அல்லது சம்மதத்துடன் தவிர, நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவழக்கெதுவும் தொடரப்படுதல் ஆகாது.

(2) கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய அவசரகால ஒழுங்குவிதி எதற்குமெதிரான ஏதேனும் தவறு தொடர்பில், இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாவென சனாதிபதியானவர் கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம் ; அதற்கிணங்க இத்தகைய கட்டளை வலுவிலிருக்கும் காலம் வரையில் அப்பந்தி அத்தகைய தவறெதற்கும் ஏற்புடையதாலாகாது.

66. (1) அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்கு, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியில் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தில் எது எப்படியிருப்பினும், சட்டத்துறைத் தலைமையதிபதியின் குற்றப் பகர்வின் மீது நீதாய விளக்கமொன்று உள்ளிட்ட விளக்கமானது, நடாத்தப்படலாம் என்பதுடன், அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஆனவர் பூர்வாங்க விசாரணையின்றி, விடயத்துக்கேற்றவாறு மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் யூரர் சபை இல்லாமலே விளக்கப்படுதலும் வேண்டும். மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம்.

ஆயின், பூர்வாங்க விசாரணையொன்றில் பதியப்படும் சான்று, குற்றப்பகர்வு ஒன்றைத் தயாரிப்பதற்கு அவசியமாகுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, பூர்வாங்க விசாரணையொன்றை நடத்தும்படி அவர் பணிக்கலாம். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினது XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், அத்தகைய பூர்வாங்க விசாரணைக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றம் பகரப்பட்ட ஆள் ஒருவர், சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றிப் பிணையிற் செல்ல அனுமதிக்கப்படலாகாது.

(3) பந்தி (2) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதியின் கீழான ஏதேனும் விளக்கத்தில் நீதிமன்றம் அல்லது தலைமை வகிக்கும் அதன் நீதிபதி, நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட எல்லா ஆட்களையும் அழைத்துவரும்படி, கைது செய்யும்படி, கட்டுக்காப்பிலிடும்படி அல்லது பிணையில் செல்லவிடும்படி பணிப்புரைகளை விடுக்கலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் எவரேனும் ஆள் பற்றிய மேல்நீதிமன்றத்தின்முன்னரான விளக்க மானது, அவர் கைதுசெய்தலைத் தட்டிக்கழிக்கின்றார் அல்லது தலைமறைவாகியிருக்கின்றார் அல்லது சுகவீன முள்ளதாகப் பாசாங்கு செய்கின்றார் என நீதிமன்றம் திருப்திப்படின், அத்தகைய ஆள், வருகைதராதவிடத்திலும் தொடங்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடத்தப்படலாம்.

(5) இவ்வொழுங்கு விதிகளின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றம் பகரப்பட்ட ஆள் எவரும், அத்தகைய விளக்கம் தொடங்குவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்கு அதிகாரமாகவிருக்காத எந்நேரத்திலேனும் மேல் நீதிமன்றத்துக்கான எழுத்திலான விண்ணப்பம் மூலம், வழக்கு தொடுநர் அழைக்கக் கருதியிருக்கும் சாட்சிக்காரர்களினால் அளிக்கப்பட்ட கூற்றுக்களினதும், விளக்கத்தின்போது நம்பப்படவுள்ள ஆவணங்களினதும் படிகளைத் தனக்குக் கொடுத்துதவுமாறு வேண்டப்படலாம். அத்துடன் நீதிமன்றம் அத்தகைய கூற்றுக்களின் அல்லது ஆவணங்களின் எல்லாப் படிகளையும் அல்லது நீதிமன்றம் அதன் தற்றுணிபின் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கூற்றுக்களின் அல்லது ஆவணங்களின் படிகளை மட்டும் அத்தகைய ஆளுக்குக் கொடுத்துதவ வேண்டுமெனப் பணிக்கலாம்.

(6) இவ்வொழுங்கு விதிகளின் நீதாய மேல் நீதிமன்றமொன்று உள்ளிட்ட மேல் நீதிமன்றத்துக்கு முன்னரான விளக்கமொன்று இயன்றவரை விரைவாகவும் அத்துடன் விடயத்துக்கேற்றவாறு யூரர் சபை இல்லாமலேயே மேல் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னர் வேறு விளக்கங்களுக்கென எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையிலும் நடாத்தப்படல் வேண்டும்.

*சான்றில் கூற்றுக்கு ஏல்தகைமை.*

*67. (1) அவசரகால ஒழுங்குவிதியொன்றின் கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளை விளங்குகையில் அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட கூற்றொன்று, அது குற்ற ஒப்புதலொன்றாகவிருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அத்தகைய ஆள், அக்கூற்றை அளித்த நேரத்தில் பொலிசு அலுவலரொருவரின் கட்டுக்காப்பில் இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அல்லது அத்தகைய கூற்றானது நீதிவானொருவரின் முன்னிலையில் அளிக்கப்பட்டாலுஞ்சரி, இல்லாதுவிடினுஞ்சரி, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய கூற்று இயைபற்றதாகாதிருப்பின், அவ்விதமிருப்பின் மட்டுமே, அத்தகைய ஆளுக்கெதிராக காண்பிக்கப்படலாம்.*

*ஆயின், எப்படியிருப்பினும், உதவிப் பொலிசு கண்காணிப்பாளர் பதவிக்குக் குறைந்த பதவியிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவருக்கு அத்தகைய கூற்று அளிக்கப்படாதிருந்தால் அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்.*

*(2) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றின் விடயத்தில், எவரேனுமாளுக்கெதிராக (1) ஆம் பந்தியின்கீழ் எண்பிக்கப்படக்கூடியதும் அவரினாலேயே செய்யப்பட்டதுமான கூற்றொன்று, இவ்வொழுங்கு விதிகளின் 59 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அளிக்கப்பட்ட கூற்றொன்றல்லாத வேறு சான்றினால் அத்தகைய கூற்றினது முக்கியமான விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின், இருப்பின் மட்டுமே அத்தகைய தவறுக்காக கூட்டாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வேறெவரேனுமாளுக்கெதிராக எண்பிக்கப்படலாம்.*

*(3) ஓராம் அல்லது (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கூற்று சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் இயைபானதல்லவென எண்பிக்கும் பொறுப்பு அது இயைபானதல்லதென அழுத்திக் கூறும் ஆளின் மீதாதல் வேண்டும்.*

*(4) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம், 36 ஆம், 30 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகா.*

*(5) எவரேனுமாளினால் அளிக்கப்பட்ட கூற்றொன்று, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எவ்விதமிருப்பினும், (1) ஆம் அல்லது (2) ஆம் பந்தியின்கீழ் எண்பிக்கப்படலாம்.*

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XIஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைமை யாகாமை.*

*68. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், எவையேனும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் நடாத்தப்படும் எவையேனும் புலனாய்வுகளுக்கு ஏற்புடையனவாதலாகா.*

*அரசாங்கப் பகுப்பாய்வாளரின் சான்றிதழும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தை அழித்தலும்.*

*69. (1) தவறொன்றுக்கான எவையேனும் நடவடிக்கைகளில் - அரசாங்கப் பகுப்பாய்வாளரின் சான்றிதழும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தை அழித்தல்,அரசாங்கப் பகுப்பாய் வாளருக்கு, பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு, உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது அத்தகைய தன்மையில் செயலாற்றும் வேறெவரேனும் அலுவலருக்குப் பரிசோதனைக்கென அல்லது பகுப்பாய்வுக்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட எப்பொருளினதும் அல்லது பதார்த்தத்தினதும் அடையாளம், சேர்க்கை அல்லது இயல்பு பற்றி அவரது கைப்படச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் சான்றிதழொன்று அத்தகைய ஆள் அத்தகைய நடவடிக்கைகளிற் சான்றளிப்பதற்கு அழைக்கப்படாமல், அத்தகைய சான்றிதழ் கொண்டுள்ள கூற்றுக்களின் உண்மை பற்றி முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.*

*(2) அரசாங்கப் பகுப்பாய்வாளர், பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளர், உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அந்தத் தன்மையில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலர், எவரேனும் தவறு தொடர்பில் பரிசோதனை செய்வதற்கென அல்லது பகுப்பாய்வு செய்வதற்கென அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது பதார்த்தத்தை தமது கட்டுக்காவலில் வைத்திருத்தல் பாதுகாப்பற்றது அல்லது இயலக்கூடியது அல்லது என்று அபிப்பிராயப்பட்டால், அத்தகைய அலுவலர் தேவையான அத்தகைய பரிசோதனை அல்லது பகுப்பாய்வைச் செய்தபின்னர் அத்தகைய பொருளை அல்லது பதார்த்தத்தை ஒழிப்பித்து விடலாம் அல்லது அழிப்பித்து விடலாம்.*

*(3) இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் பொருள் அல்லது பதார்த்தம் ஒழிக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டிருக்குமிடத்து, அவ்விதம் ஒழிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பொருள் பற்றிய அல்லது பதார்த்தம்*

பற்றிய பதிவேடொன்று விடயத்திற்கேற்ப அரசாங்கப் பகுப்பாய்வாளரால், பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளரால், உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளரால் அல்லது அந்தத் தன்மையில் செயலாற்றும் வேறு எவரேனும் அலுவலரால் வைத்திருக்கப்படல் வேண்டும். அத்தகைய எவரேனும் அலுவலரின் கைப்பட்டதெனக் கொள்ளப்படுவதும், அத்தகைய பதிவேட்டின் பொருளடக்கத்தை அல்லது உள்ளீட்டைக் கொண்டதுமான சான்றிதழ் ஏதேனும் தவறுக்கான எவையேனும் நடவடிக்கைகளில் அத்தகைய சான்றிதழிற் காணப்படும் கூற்றுக்கள் உண்மையானவை என்பதற்கு அந்நடவடிக்கைகளில் சான்றளிப்பதற்கென அத்தகைய அலுவலர் அழைக்கப்படாமலே, முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதியில், தவறு என்பது ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான, வெடிபொருள் கள் சட்டத்தின் கீழான அல்லது 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழான அல்லது சுடுபடைக் கலங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான அல்லது தண்டனைச் சட்டக் கோவையின் VI அல்லது VII ஆம் அல்லது VIII ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறெனப் பொருள்படும்.

70. ஆளெவரும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியினால் அல்லது அதன்கீழ் வேறோராளின்மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதில் அல்லது கடமையை நிறைவேற்றுவதில் அவ்வேறோராளை எதிர்த்தல் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுதலாகாது.

## பாகம் VIII

### நானாவிதமானவை

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்துக்கான திரிபு.*

71. (1) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் காலத்தில் -

(அ) சட்டவிரோதமாக ஆட்கள் கூடி நிற்பதைக் கலைப்பதற்கான தத்துவம் சம்பந்தமான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 95 ஆம், 96 ஆம் பிரிவுகள் வலுவில்லாதொழிதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சாஜண்ட் தரத்திற்கு குறையாத பதவியிலுள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர், கோப்ரல் தரத்திற்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கைத் தரைப்படை உறுப்பினர், தலைமை கடலோடித் தரத்திற்கு குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கை கடற்படை உறுப்பினர் அல்லது கோப்ரல் தரத்திற்குக் குறையாத பதவியிலுள்ள எவரேனும் இலங்கை வான்படை உறுப்பினர் ஏதேனும் பொதுத்தெரு, புகைவண்டிப் பாதை, பொதுப் பூங்கா, பொதுப் பொழுதுபோக்கிடம் அல்லது வேறு பொது இடம், கடற்கரை என்பவற்றில் அல்லது அவற்றிற்கண்மையில் அல்லது ஏதேனும் பொதுக் கட்டடம், அரசாங்கத் திணைக்களம் அமைந்துள்ள வளவில் அல்லது வளவுக்கண்மையில் அல்லது வளவின் அயலில் நிற்கும் எந்த ஆளையும் அல்லது ஆட்களையும் அந்த இடத்திலிருந்து அகலும்படி கட்டளையிடலாம் ; அத்தகைய கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய கையாட்களுள் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின் கீழான கட்டளையொன்றைப் பிறப்பிப்பதற்கான தத்துவமுடைய அலுவலரொருவராக அத்தகைய கட்டளை விடுக்கப்பட்ட பின்னர் எவரேனுமாள் அக்கட்டளைக்கு இணங்கியொழுகாவிட்டால் அல்லது இணங்கியொழுக மாட்டார் எனத் தீர்மானங்கொண்டவர் போன்ற அத்தகைய முறையில் நடந்து கொண்டால் அத்தகைய அலுவலர் தேவையான அத்தகைய உதவியோடு ஆயுதம் தாங்கிய வலோற்காரம் உட்பட்ட வலோற்காரத்தைப் பிரயோகிப்பதன் மூலம் அத்தகைய கட்டளைக்கு பயன்கொடுக்க முற்படலாம். அத்துடன் அவர் அத்தகைய ஆளை அவ்விடத்தினின்றும் அகற்ற, கைது செய்ய அல்லது மறித்துவைக்கச் செய்யலாம்.

(3) இவ்வொழுங்குவிதி வலுவில் தொடர்ந்திருக்கும் காலத்தில் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 (1), (2), 4 ஆகிய பிரிவுகள் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்படும் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்படும் எவரேனும் ஆளுக்கும் அல்லது அவர் தொடர்பாக ஏற்புடையனவாதலாகா.

*கேள்விகளுக்கு மறுமொழிய ளிக்கும் கடமை.*

72. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும் ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட ஆள் ஒருவர், அத்தகைய கட்டுக்காவலின் போது தடுத்து

வைத்தலின் போது எவரேனும் பொலிசு அலுவலரால் அல்லது தரைப்படை ஏவுநரால், கடற்படை ஏவுநரால் அல்லது வான்படை ஏவுநரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரால் வினவப்படலாம்; அவ்வாறு அவரிடம் வினவப்படும் வினாக்களுக்கு விடையிறுத்தல் அவ்வாறு வினவப்படும் ஆளின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் கட்டுக்காவலில் எடுக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளை வினவும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய வினவலுடன் சம்பந்தப்பட்ட வேறு ஏதேனும் நோக்கத்திற்காக இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவரேனும் அலுவலர் தடுத்து வைத்திருக்கும் அல்லது கட்டுக்காவலில் வைத்திருக்கும் ஏதேனும் இடத்திலிருந்து அத்தகைய ஆளை அகற்றிச் சென்று ஒரு தடவையில் ஏழு நாட்களுக்கு மேற்படாத காலமொன்றுக்கு அத்தகைய அலுவலரின் தற்காலிகக் கட்டுக்காவலில் அவரை வைத்திருக்கலாம்.

தகவல் பெறுவதற்கு அல்லது பொருட்களைச் சோதிப்பதற்கான தத்துவங்கள்.

73. (1) இவ்வொழுங்குவிதிகளிலடங்கியுள்ள சிறப்பேற்பாடுகள் எவற்றிற்கும் பங்கமின்றி, ஆள் எவரும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவர் சார்பில் அவ்விதம் செய்யும்படி வேண்டப்படுமிடத்து, அவ்விதம் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், அவர் வசமுள்ளதும் தேசிய பாதுகாப்புக் கருதி அல்லது பொது அமைதி பேணுவதற்கு அல்லது ஏதேனும் அவசரகால ஒழுங்குவியின் நோக்கங்களுக்காக அத்தகவலைப் பெறுதல் அல்லது பொருளைச் சோதித்தல் அவசியமானது அல்லது உகந்தது என வேண்டுதலை விடுக்கும் அதிகாரி அல்லது ஆள் அபிப்பிராயப்படும் அத்தகைய தகவலாக அல்லது பொருளாக உள்ளதுமான அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது பொருளை அவ்வேண்டுதலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது காண்பித்தல் வேண்டும் ; இவ்வொழுங்குவிதியின் கீழ் உரிய முறையில் விடுவிக்கப்பட்ட வேண்டுதலைப் பின்பற்றி எவரேனும் ஆள் தம்வசமுள்ள ஏதேனும் தகவலைக் கொடுத்துள்ள அல்லது தம்வசமுள்ள பொருளைக் காண்பிக்கத் தவறின் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதியின் பொருள் என்பது ஏதேனும் புத்தகத்தை, கணக்கை அல்லது ஆவணத்தை உள்ளடக்கும்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் குறித்த ஏற்பாடுகளிலிருந்து படை உறுப்பினர்களை விலக்களித்தல்.

74. இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை அல்லது இலங்கை வான்படை என்பவற்றைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், பொது அமைதியைப் பேணும் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அவ்விதம் செய்யும்படி அதிகாரமளிக்கப்பட்ட பொழுது ஏதேனும் வாகனத்தைச் செலுத்துகின்ற சமயத்தில் 1995 ஆம் ஆண்டு யூலை 8 ஆந் திகதிய 10815 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன (மாட்சிமை தங்கிய மகாராணியாரின் படைகளுக்கான விலக்களிப்புக்கள்) ஒழுங்குவிதிகளுக்கான அ என்னும் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளனவான மோட்டார் வாகனச் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகளிலிருந்தும் அதன் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளிலிருந்தும் விலக்கப்பட்டவராதல் வேண்டும்.

தடை விதிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள்.

75. (1) ஏதேனும் ஒழுங்கமைப்புத் தொடர்பில், அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது அதன் உறுப்பினர் அல்லது அதனைச் சார்ந்தோர் -

(அ) தேசிய பாதுகாப்புக்கு பொது அமைதி பேணுதலுக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்தி வருதலுக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கங்களுக்காக ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 44 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில், அல்லது 25 ஆம் ஒழுங்கு விதியின் (1) ஆம் பந்தியில், அல்லது ஒழுங்குவிதி 26, 27 அல்லது 28 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கங்களுள் எதற்காகவேனும்,

நடவடிக்கை எடுக்கக்கூடிய அல்லது அவ்வொழுங்கமைப்பை அல்லது அவர்களைப் பயன்படுத்தக்கூடிய ஆபத்துண்டென்று சனாதிபதி அபிப்பிராயப்படுமிடத்து அவர் கட்டளையொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் மூலம் அத்தகைய ஒழுங்கமைப்பு தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தலாம்.

(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் ஒழுங்கமைப்பு தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்படுமிடத்து, அப்போது இவ்வொழுங்குவிதி, தடை செய்யப்பட்ட ஒழுங்கமைப்பு செய்து வந்த அல்லது முன்பொருபோது செய்து வந்த செயல்களைப் பொருளளவிலொத்த செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் வேறு ஒவ்வோர் ஒழுங்கமைப்புக்கும் ஆளுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும் அல்லது ஆட்கூட்டத்திற்கும், அது அல்லது அவர் அல்லது அவர்கள் தடைசெய்யப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பு என்றாற்போன்று, ஏற்புடையதாதலாலும் வேண்டும்.

(3) ஆளெவரும்-

(அ) தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பு ஒன்றால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன் முகாமையாளரல் வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதாகக் கொள்ளப்படும் எழுத்திலான பொருளை அல்லது அச்சிடப்பட்ட பொருளை தயாரித்தலோ அச்சிடுதலோ அல்லது விநியோகித்தலோ அல்லது எந்த ஒரு வகையிலேனும் தொடர்புபட்டிருத்தலோ ஆகாது ; அல்லது

(ஆ) தடைசெய்யப்பட்ட ஒழுங்கமைப்பால் அல்லது அதன் உறுப்பினரொருவரால் அல்லது அதன் முகாமையாளரால் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கடடளையை, வேறோராளுக்கு எந்த வகையிலேனும் அறிவித்தல் அல்லது அறிவிக்க எத்தனித்தல் ஆகாது ; அல்லது

(இ) ஒழுங்கமைப்பின் அல்லது அதன் உறுப்பினரின் அல்லது முகாமையாளரின் கூட்டத்தைக் கூட்டுதல் அல்லது கூட்டத்திற்குச் சமுகமாயிருத்தல் ஆகாது ; அல்லது

(ஈ) ஒழுங்கமைப்பைச் சேரும்படி அல்லது அதற்கு ஆதரவளிக்கும்படி எந்தவோராளையும் அழைத்தல் அல்லது போதித்தல் ஆகாது ; அல்லது

(உ) ஒழுங்கமைப்பின் நோக்கங்களுக்காகப் பணமாக அல்லது வேறு வகையில் உதவுதொகை உதவும்படி வேண்டுதல் அல்லது உதவுதொகை சேர்த்தல் அல்லது மேற்கூறப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் உதவுதொகை செலுத்துதல் ஆகாது ; அல்லது

(ஊ) ஒழுங்கமைப்பின் முகாமையாளர் என்ற முறையில் அல்லது உறுப்பினர் என்று வேறு ஆட்கள் நம்பும்படி இட்டுச் செல்லும் சாத்தியமுள்ள அத்தகைய முறையில் ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்தல் அல்லது செய்ய எத்தனித்தல் ஆகாது ; அல்லது

(எ) ஒழுங்கமைப்பின் எவ்வுறுப்பினருக்கும் அல்லது ஒழுங்கமைப்பின் ஓர் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் எந்த ஆளுக்கும் புகலிடமளித்தல் அல்லது மறைத்து வைத்திருத்தல் ஆகாது.

(4) (அ) தேசிய பாதுகாப்பின் அக்கறைகளுக்கு அல்லது பொது மக்களின் ஒழுங்கினைப் பாதுகாத்தலுக்குத் திட்டமிட்டே பங்கமேற்படுத்துவதற்கான ;

(ஆ) சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்களையும் சேவைகளையும் பேணுவதற்குத் திட்டமிட்டே பங்கமேற்படுத்துவதற்கான; அல்லது

(இ) ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி செய்யுமாறு, கிளர்ந்தெழுமாறு அல்லது உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுத்துமாறு ஆட்களைத் திட்டமிட்டே தூண்டுவதற்கான அல்லது ஊக்கமளிப்பதற்கான

விடயத்தைக் கொண்டுள்ள ஆவணம் எதனையும் தயாரிப்பதற்கு ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அச்சகம் எதுவும் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியமுள்ளது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அவ்வொழுங்கமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அச்சகம் அல்லது எல்லா அச்சகங்களும் அல்லது அவற்றின் எதுவும், கட்டளையானது வலுவில் இருக்கும் வரை எத்தன்மைத்தான எந்நோக்கத்துக்காகவும் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்படலாகாதெனச் சட்டமூலம் பணிக்கலாம்.

(5) சட்டத்துறை தலைமையதிபதி அல்லது ஒழுங்கமைப்பின் உறுப்பினர் அல்லது ஒழுங்கமைப்பிற்குக் கடன்கொடுத்தவர் விண்ணப்பஞ் செய்ததன் மேல், ஏதேனும் ஒழுங்கமைப்பு இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகும். ஒழுங்கமைப்பு ஒன்று என மேல் நீதிமன்றத்திற்குத் தோன்றினால், ஒழுங்கமைப்பு வைத்திருக்கும் அல்லது ஒழுங்கமைப்பிற்காக வைத்திருக்கப்படும் ஆதனம் நீதிமன்றத்தின் அனுமதியின்றிக் கையுதிர்க்கப்படுதலைத் தடுப்பதற்கு அவசியமெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்கலாம். மேற்சொல்லப்பட்ட அத்தகைய ஆதனம் பற்றியும் ஒழுங்கமைப்பின் அலுவல்களைப் பற்றியும் விசாரணை நடாத்தி அறிக்கை தருமாறு பணிக்கலாம் என்பதோடு, ஒழுங்கமைப்பை முடித்துக் கட்டி அதைக் குலைப்பதற்கும்,

மேற்சொல்லப்பட்டபடியான அத்தகைய ஏதேனும் ஆதனத்தை அத்தகைய ஏதேனும் விசாரணை, அறிக்கை ஒழுங்கமைப்பை முடித்துக்கட்டல், ஒழுங்கமைப்பைக் குலைத்தல் என்பன தொடர்பாக ஏற்பட்ட செலவுகளுக்குப் பயன்படுத்தற்கும் அல்லது விண்ணப்பம் செய்த திகதிக்கு முன்னர் அல்லது பின்னர் நீதிமன்றத்தின் அங்கீகாரத் தோடு ஒழுங்கமைப்பு உற்ற பொறுப்புக்களை விடுவித்தற்கும் பயன்படுத்துவதற்கும் நியாயமானதும் ஒப்புரவானதும் என்று கருதும் அத்தகைய மேலதிகக் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்; அத்துடன் மேற்சொன்னவாறு பயன்படுத்தும்படி நீதிமன்றத்தால் பணிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஆதனம் குடியரசுக்குப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடுதலும் வேண்டும்.

(6) இந்த ஒழுங்கு விதியில் "முகாமையாளர்" என்பது ஏதேனும் ஒழுங்கமைப்புத் தொடர்பாக வரும் போது ஒழுங்கமைப்பின் எந்தவோர் அலுவலர் என்றும், ஒழுங்கமைப்பின் முகாமையில் அல்லது கட்டுப்பாட்டில் பங்குகொள்ளும் எவரேனும் ஆள் என்றும் அல்லது ஒழுங்கமைப்பின் முகாமையில் அல்லது அதனைக் கட்டுப்படுத்தலில் பதவி வகிக்கின்றவரான அல்லது பதவி வகிப்பவராகக் கொள்ளப்படுகின்றவரான எவரேனும் ஆள் என்றும் பொருள்படும்.

குண்டுகள் முதலியவற்றால் காயமடைந்தவர் களுக்கு உதவிபுரிதல்.

76. ஒரு சுடுபடைக்கலம், குண்டு, வெடிப்பொருள் அல்லது வேறு கொலைப் பதார்த்தம் அல்லது உபாயம் ஒன்றினைப் பயன்படுத்துகையின் விளைவாகக் காயமடைந்துள்ளவராகத் தோற்றும் காயமடைந்த எந்தவோராளுக்கும் மருத்துவ உதவிபுரியும் எந்த ஆளும் அல்லது அத்தகைய காயமடைந்த ஆளொருவரால் மருத்துவ உதவி நாடப்படும் எந்த ஆளும், அத்தகைய காயமடைந்த ஆளின் அடையாளம் தொடர்பான விபரங்களையும், காயத்தின் விபரங்களையும் எவ்வெவ்விடத்துச் சாத்தியமோ காயம் விளைவிக்கப்பட்ட சூழ்நிலைகள் என்பவற்றையும் பதிதல் வேண்டுமென்பதோடு அத்தகைய தகவலை ஆகக் கிட்டவுள்ள பொலிசு நிலையத்திற்கு உடனடியாகக் கொடுத்துதவுதல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கையி லிருந்து பாதுகாப்பு.

77. சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத்திலான சம்மதத்தின் மூலம் அல்லது சம்மதத்துடன் அன்றி, ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் கீழ் அல்லது பணிப்பின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் சட்ட நீதிமன்றத்திலும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கை ஏதும் தொடுக்கப்படலாகாது.

### அட்டவணை

(ஒழுங்குவிதி 2 மற்றும் 44)

(அ) மத்திய வங்கியினால் அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் கருதப்பட்டுள்ள ஏதாவதொரு வங்கி நிறுவனமொன்றினால் அல்லது 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கம் தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தினால் அமைக்கப்பட்டதுமான அரச ஈட்டு, முதலீட்டு வங்கியினால் வழங்கப்படும் சேவைகள் ;

(ஆ) சுகாதார, மகளிர் விவகாரங்கள் அமைச்சின் கீழான மருத்துவச்சாலைகளில், மருந்துச்சாலைகளில் மற்றும் வேறு நிறுவனங்களில் நோயாளிகளைப் பேணுதல், பொறுப்பேற்றல் அவர்களுக்கு உணவளித்தல், பராமரித்தல், சிகிச்சையளித்தல் தொடர்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது நியமிக்கப்பட்ட எந்தவொரு விதமானதுமான சகல சேவைகள், அலுவல்கள் அல்லது தொல் அலுவல்கள் ;

(இ) பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், காஸ் உட்பட எரிபொருள் வழங்குதல் அல்லது விநியோகித்தல் தொடர்பான சகல சேவைகள் ;

(ஈ) மின்சக்தி வழங்குதல் தொடர்பான சகல சேவைகள் ;

(உ) வெளிநாட்டு தந்தி தொடர்புச் சேவை உட்பட தபால் தந்தி தொடர்புச் சேவைகள் நடத்துதல் தொடர்பாக நிறைவேற்றத் தேவைப்படும் அல்லது அதற்கு உரித்தான எந்தவிதமானதுமான சகல சேவைகள், வேலை அல்லது முயற்சி ;

(ஊ) சகல அமைச்சுக்கள், அரசாங்கத் திணைக்களங்கள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் அலுவலர்களால் அல்லது சேவையாளர்களால் செய்யப்படுவதற்கு அவசியமான அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தவிதத்திலுமான எத்தன்மையதுமான சகல சேவைகளும் அலுவல்களும் தொழில் நடவடிக்கைகளும் ;

(எ) தெருப் போக்குவரத்து, புகையிரதம் மற்றும் ஏனைய பொதுப் போக்குவரத்துச் சேவைகள் நடத்துதல், அது தொடர்பாக நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அல்லது உரித்தாக்கப்படும் எந்தவிதமான சகல சேவை அலுவல்கள், தொல் அலுவல்கள் ;

(ஏ) தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய செய்கைகளைப் பேணுதல், நிருவகித்தல் அல்லது தேயிலை, இறப்பர், தென்னை உற்பத்திகள், அது தொடர்பாக நிறைவேற்றத் தேவைப்படும் அல்லது எந்தவிதமானதுமான சகல சேவைகள், அலுவல்கள் அல்லது தொழில் அலுவல்கள்;

(ஐ) வியாபாரப் பண்டங்களின், ஆடைகளின் அல்லது வேறு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்பில் செய்யப்படவேண்டிய அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தவொரு விதத்திலுமான சகல சேவைகள், அலுவல்கள் அல்லது தொழில் நடவடிக்கைகள் ;

(ஒ) அனைத்து ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி சேவைகளையும் பேணுதல் தொடர்பில் செய்யப்படுவதற்கு அவசியமான அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தவிதத்திலுமான எல்லாச் சேவைகளும் அலுவல்களும் அல்லது தொழில் நடவடிக்கைகளும் ;

(ஓ) ஏதேனும் உணவுப் பொருள் அல்லது மருந்து அல்லது பொது மக்களுக்கு தேவைப்படும் வேறு ஏதேனும் பொருளின் விற்பனை, வழங்கல் அல்லது விநியோகம் தொடர்பில் செய்யப்படுவதற்கு அவசியமான அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தவிதத்திலுமான எல்லாச் சேவைகளும் அலுவல்களும் அல்லது தொழில் நடவடிக்கைகளும்.